Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

## அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 20 வெள்ளிக்கிழமை (04.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 276

## தமிழகத்தில் கைதானவர்களில் ஒருவர் புலிகளின் கணக்காளர்
### அனைவரும் புழல் சிறையில்

(சென்னை)

தமிழகத்தில் சட்டவிரோதமாக நுழைந்ததாக கூறப்பட்டு கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் விடுதலைப்புலிகள் அமைப்பின் கணக்காளராக செயற்பட்டவர் எனத் தெரியவந் துள்ளது.

புதன்கிழமை இராமேஸ்வரம் அருகே உள்ள தனுஷ்கோடி அரிச் சல்முனை கடற்கரையில் ஒரு படகில் 2 ஆண்கள், 2 பெண்கள் வந்து இறங்கினர்.

இவர்களில் எஸ்.சதீஸ் (வயது-39) எனும் நபர் விடுதலைப் புலிகள் அமைப்பில் கணக்காளராக (accountant) பணிபுரிந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன் ரவி எனப்படும் எஸ்.ரவீந்திரன் (வயது-38) என்பவரும் ஜே.சாந்தி மற்றும் மலர் ஆகிய நால்வருமே இவ்வாறு கைதாகியுள்ளனர். இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக தமிழக டி.எஸ்.பி. விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

## ஒரே சூலில் 5 குழந்தைகள்

பேராதனை போதனா வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை கண்டி, வெரெல்லகம பகுதியைச் சேர்ந்த தாயொருவர் ஒரே சூலில் ஐந்து சிசுக்களை பிரசவித்துள்ளார். இவர் நான்கு ஆண் குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையையும் பிரசவித்துள்ளார். தாயும் குழந்தைகளும் தற்போது ஆரோக்கியமாக இருக்கின்றனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கண்டியைச் சேர்ந்த சட்டத்தரணியான தனுசா எக்கநாயக்க என்பவரே இவ்வாறு ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

## தேர்ச்சில்லில் நசியுண்டு குடும்பஸ்தர் காயம்
### பருத்தித்துறை சிவன்கோவிலில் அனர்த்தம்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சிவன் கோவில தேர்ச்சில்லில் அகப்பட்டு முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புற்றளை புலோலியைச் சேர்ந்த மகாலிங்கம் இராமசாமி (வயது- 69) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைநதுள்ளார்.

நேற்றுக்காலை பருத்தித்துறை சிவன் கோவில் தேர்த்திருவிழா இடம்பெற்றுக் கொண

(19) ஆம் பக்கம் பார்க்க



# யாழ். பல்கலைக்கழகத்துக்கு மேலும் ஒரு மருத்துவ பீடம்
## உயர்கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு))

யாழ். பல்கலைக்கழகத்துக்கு மற்றுமொரு புதிய மருத்துவ பீடம் உருவாக்கப்படவுள்ளது என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.

கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், எவர் என்ன கூறினாலும் இலங்கையின் இரண்டாவது தனியார் மருத்துவக் கல்லூரி கண்டியில் ஆரம்பிக்கப்படும்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமும், பேராதனை பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவ பீடமும் பெற்றுக்கொடுக்கப்படும். இதனைத் தவிர ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் களனி பல்கலைக்கழகங்களுக்கு இரண்டு பொறியியல் பீடங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் சப்ரகமுவ பல கலைக்கழகங்களுக்கு இரண்டு மருத்துவ பீடங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளை தோற்கடித்தமைக்கு தண்டனையா?
## ஐ.நா. விசாரணை இங்கு தேவையில்லை
### பாலித்த கோஹன தெரிவிப்பு

வடக்கில் யுத்த காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதாகக் கூறி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை விசாரணை நடத்துவது முழுமையாக அவசியமற்ற ஒன்றாகும் என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித்த கோஹன தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் விசாரணை என்பது முழுமையாக வேண்டப்படாத ஒன்றாகும். இது மூன்றாம் உலக வறிய நாடு ஒன்று பயங்கரவாதத்தைத் தோற்கடித்தமைக்காக தண்டிக்கப் படுவதைப் போன்றதாகும் என்று பாலித்த கோஹன தெரிவித்ததாக ஏ.எப்.பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது. இதேவேளை வெள்ளைக் கொடி விவகாரம்

(19) ஆம் பக்கம் பார்க்க



## வேலணைப்பகுதிக்கு முழுமையான மின்விநியோகம்
### பிரதேச செயலகம் நடவடிக்கை

வடக்கின் வசந்தம் மின்சார வழங்கல் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவில் இதுவரை மின்சாரம் பெற்றுக்கொள்ளாத இடம் இருக்குமாயின் அவை பற்றிய விபரங்களை உடனடியாக தங்களினது கவனங்களுக்கு தெரியப்படுத்தி வைக்குமாறு வடக்கின் வசந்தம் மின்சார விநியோகத்திற்கான பொறுப்பாளர் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷனை கேட்டுள்ளார்.

அவர்களினது கோரிக்கைகளுக்கு ஏற்ப இதுவரை மின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மேலும் இரு எலும்புக்கூடுகள் முகமாலையில் நேற்று மீட்பு



முகமாலைப் பகுதியில் நேற்றையதினம் கண்ணி வெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்ட பணியாளர்களால் மேலும் இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ் எலும்புக்கூடுகள் நேற்றைய தினம் மீட்கப்பட்ட பகுதிக்கு அருகில் இருந்தே மீட்கப்பட்டுள்ளதுடன். இவை இரண்டும் பெண்களின் எலும்புக்கூடுகள் எனவும் நம்பப்படுகின்றது. கடந்தகால யுத்தத்தில் போர் முன்னரங்கப்பகுதியாக இவை

(19) ஆம் பக்கம் பார்க்க

## தோற்பொருள் உற்பத்தியை ஊக்குவிக்க அமுலாகிறது செயற்றிட்டம்



(கொழும்பு)

தோற்பொருள் உற்பத்திகளை விருத்தி செய்வது தொடர்பாக விசேட நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

மொரட்டுவ தோற்பொருள் அபிவிருத்தி நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் மேற்கொண்டு தொழிற்துறை நடவடிக்கைகளை மேலும் விருத்திசெய்வது தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

கொழும்பு மொரட்டுவப் பகுதியில் அமைந்துள்ள பண்டார நாயக்க பாதணி தோற்பொருள் அபிவிருத்தி நிலையத்திற்கு அமைச்சர் விஜயம் மேற்கொண்டார்.

இவ்வாறு சென்ற அமைச்சர் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளுக்கும் அவர் விஜயம் மேற்கொண்டார். இதனிடையே அங்குள்ள மற்றுமொரு கழிவு உலோகங்களினது களஞ்சியசாலைக்கும் அமைச்சர் நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் நவாப் ரஜாப்தீன் அமைச்சின் மேலதிக செயலாளர் சுசந்த டி சில்வா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வாடகைக்கு வீடு/கட்டடம் தேவை

அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீட மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய வீடுகள்/கட்டடங்கள், திருமுருகண்டி வீதியை/ கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் வாடகைக்குத் தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்குத் தர விரும்புவோர் கீழ் வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 23.07.2014 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் நிர்வாகக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களுக்கான வீடு/கட்டடம்" என குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

* தொடர்புகளுக்கான தொலைபேசி இல.021 222 6517

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீட மாணவர்களின் உபயோகத்திற்கான வீடு/கட்டடம்

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ........................ ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/கட்டடத்தை பல்கலைக்கழகத்திற்கு குத்தகைக்குத்தர விரும்புகின்றேன்.

வீடு/கட்டடம் பற்றிய விபரங்கள்

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம் ........................

2) வீடு/கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும் ........................

3) தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
பெயர்: ........................
முகவரி: ........................
தொலைபேசி இல: ........................

4) (a) வீட்டின்/கட்டடத்தின் பரப்பளவு (சதுர அடி) ........................
(b) வீடு/கட்டடம் அமைந்துள்ள காணியின் பரப்பளவு ........................

5) அறைகளின் எண்ணிக்கை ........................
குளியல் அறைகளின் எண்ணிக்கை ........................
மலசல கூடங்களின் எண்ணிக்கை ........................

6) மின்சார வசதி உண்டு/இல்லை ........................
விபரம் ........................

7) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர்
விபரம் ........................


8) எதிர்பார்க்கும் குத்தகை/மாதாந்த வாடகை ........................
(வீடு/கட்டட பராமரிப்பு தொடர்பான செலவுகள் உள்ளடங்கலாக)

9) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு ........................

10) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்) ........................

திகதி ........................ விண்ணப்பதாரரின் கையொப்பம்

(C/3730)


யாழ்.புகையிரத நிலையப் பணிகள் துரிதமாக இடம்பெற்றுவருகிறது தண்டவாளங்கள் சாவகச்சேரியில் இருந்து யாழ்.புகையிரத நிலையம் வரை தொடர்ச்சியாக அமைக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் தண்டவாளங்களுக்கு கொட்டப்பட்ட கற்களை இறுக்கி சமப்படுத்துவதற்காக ரம்பிலிங். இயந்திரம் யாழ். புகையிரத நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு பணிகள் தொடர்கி[illegible] சமிக்ஞை விளக்கு கம்பங்களும் பாதுகாப்பு கடவைகளும் அமைக்கப்படுவதைக் காணலாம். (85, நி)

# காரைநகர் பகுதி மக்களின் தேவைகள் தொடர்பில் ஆராய்வு



(காரைநகர்)

காரைநகர் பகுதி மக்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று சமுர்த்தி மகாசங்க காரைநகர் இணைப்பாளர் சசிதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் காரைநகர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயககட்சியின் காரைநகர் இணைப்பாளருமான வீ.கண்ணன் கலந்து கொண்டார்.

இதன்போது வாழ்வாதார வசதிகள் குறைந்த குடும்பங்களுக்கிடையில் இருக்கின்ற குறைபாடுகள் அவர்களுக்கான உதவிகளை இனங்கண்டு அறிந்து கொள்ள மக்களிடையே நேரடியாகச் சென்று அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறியப்பட்டன.

இதில் கருத்துத் தெரிவித்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் இணைப்பாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் நிதி ஒதுக்கீட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலமாக மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும், மிக விரைவில் இச்செயற்றிட்டம் நடைமுறைக்குவர இருப்பதனால் தங்களது பங்களிப்பு மிக அவசியமானது என்றும் கேட்டுக் கொண்டார்.

இக் கலந்துரையாடலில் பொருளாதார அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர்கள் சமுர்த்தி வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் புகையிரதப்பாதை வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாழையடி, மாமுனை, செம்பியன்பற்று, சுன்னகாம், கந்தரோடை, மல்லாகம், கல்லாரை, ஏழாலை, அள வெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை, சிறுவிளான், மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, வித்தகபுரம், கீரிமலை, கூவில், வசந்தபுரம் பிர தேசத்திலும்

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை மருதனார்மடம், அம்புலவாணர் வீதி, சுன்னாகம் இலங்கை வங்கி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்பட்டிருக்கும்.

# மலர் வெளியீட்டு விழாக்கள்

ஜீவநதி 7 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

சாகித்தியரத்னா தெனியான் தலைமையில் நடைபெறும் இந்நகழ்வில் வரவேற்புரையை துணையாசிரியர் வெ.துஷ்யந்தன், வெளியீட்டுரையை ஆங்கில மொழி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதிகந்தையா ஸ்ரீ கணேசன், மதிப்பீட்டுரையை சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து ஜீவநதி ஏற்பாட்டில் வடமராட்சி எழுத்தாளர்களின் நூல்கள் தமிழ் இலக்கிய சஞ்சிகைகள் என்பவற்றின் கண்காட்சியும் கலையகத்தில் காலை 9 மணிமுதல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

---

சுதுமலை சிற்மயபாரதி வித்தியாலய 130 ஆவது ஆண்டின் 'சின்மயம்' மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு வடமாகாண அமைச்சர் குருகுலராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2542 திகதி 02-07-2014

ஆங்கில எழுத்து: D

வெற்றி எண்கள்: 10 27 29 56 — போனஸ் இல: 32

ஜக்பொட் பரிசு ரூ.14,571,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 222162 | 20/- | 4,443,240/- |
| 2 இல | 15721 | 100/- | 1,572,100/- |
| 3 இல | 318 | 1,000/- | 318,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8942 | 40/- | 357,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 673 | 1,000/- | 673,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,571,975/- | - |
| 1 இல + போனஸ் இல | 10534 | 100/- | 1,053,400/- |
| 2 இல + போனஸ் இல | 510 | 500/- | 255,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 428 | 200/- | 85,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 259322 | | 10,550,520/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.07.05 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 15,177,975/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொ.பே: 2333546/7

(C/3732)


## கூட்டுறவு ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம)

வடமாகாண உள்ளூராட்சி கூட்டுறவு, கைத்தொழில் சமூக நலத்துறை மற்றும் காணி அமைச்சின் ஏற்பாட்டில் கூட்டுறவு ஆய்வுமாநாடு ஆரம்ப நிகழ்வும் அறிமுகமும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு யாழ.மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.


## டயானா பிளாஸ்ரிக்

*நீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# பிரதேச சபையில் செயலாளர் இன்மையால் நெருக்கடிக்குள்ளாவதாக தவிசாளர் குற்றச்சாட்டு

(வலிகாமம்)


வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளர் பதவி நிரப்பப்படாமல் வெற்றிடமாகவுள்ளதால் சபை பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக சபைத்தவிசாளர் குற்றச்சாட்டு விடுத்துள்ளார்.

கடந்த யூன் முதலாம் திகதியுடன் செயலாளர் பதவியுயர்வு பெற்றுச் சென்றமையைத் தொடர்ந்து இன்றுவரை குறித்த ஆளணி நிரப்பப்படவில்லை எனவும் இதனால் சபை சார்ந்த கொடுப்பனவுகள் சம்பந்தமான பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. ஒப்பந்தகாரர்கள் மற்றும் சபை சார்ந்த வேலைகளுடன் தொடர்புடை யவர்கள் கொடுப்பனவைப் பெற முடியாமல் இடர்பாடுகளை எதிர் நோக்கி வருவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி அமைய மற்றும் வெளிவாரி அடிப்படையிலான ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவும் இதுவரையில் வழங்கப்படவில்லை எனவும் செயலாளர் நியமனத்தை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதம செயலாளர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரைக் கோரியிருந்தும் இதுவரை செயலாளர் நியமிக்கப்படவில்லை எனவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக உள்ளூராட்சி உதவியாளர் ஒருவரை பதிற் கடமையாற்றவும் காசோலைகளில் கையொப்பம் இடுவதற்குமான அங்கீகாரத்தை வழங்குமாறு சபைத்தீர்மானத்தின் மூலமான கோரிக்கைக்கும் எவ்வித பதிலும் கிடைக்கப் பெறவில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார். (48)

# சாந்தபுரம் வறியமுதியோருக்கு உலர்உணவுப் பொருட்கள் வழங்கல்




கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் வரும் அம்பாள்குளம் கிராமஅலுவலர் பிரிவில் உள்ள சாந்தபுரம் கிராமத்திலுள்ள 86 வறிய முதியோருக்கு எஸ்.கே.முதியோர் இல்லத்தினால் தலா 2000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வழங்கப்பட்டது.

கிராம அலுவலர் ம.சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மைவிருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொண்டு பொருட்களை வழங்கினார். (90)

# "டைனமற்" மூலம் மீன்பிடித்த நால்வருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

"டைனமற்" வெடிக்க வைத்து மீன் பிடித்த மற்றும் அதனைக்கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் கைதான 4 பேருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் நேற்றுமுன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றினால் விதிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் 5 ஆம் திகதி குருநகர் பகுதியில் வைத்து 1200 கிலோ கிராம் மீன்களுடன் கடற்படையினால் கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் குருநகரையும், மற்றவர்கள் கொட்டடியையும் சேர்ந்தவர்கள்.

இவர்கள் யாழ்நீரியல் கடற்றொழில் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களினால் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் தலா 2 இலட்சம் ரூபா பிணையில் இவர்களைச் செல்ல அனுமதித்த நீதிமன்றம், சில மீன்களை பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டதுடன் ஏனைய மீன்களை அழிக்க உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் கடற்றொழில் நீரியல் வள அதிகாரிகளினால் நீதிமன்றில் வழங்கப்பட்ட அரச பகுப்பாய்வு அறிக்கைக்கு அமைய இந்த சந்தேக நபர்களுக்குத்தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார். (இ)

# நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்




கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை முன்றிலில் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகையில் வித்தியாலய அதிபர் த.தயானந்தன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்துக்குமார் இராதாகிருஸ்ணன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும் கலந்து கொண்டனர்.

நினைவுப் பேருரையை வித்தியாலயத்தின் பழைய மாணவனும் ஊடகவியலாளருமான ந.பரமேஸ்வரன் நிகழ்த்தினார் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# எல்லாத்துக்கும் அவையே காரணம் எண்டது விளங்கினவனே அசல் தமிழ்த் தேசியன்!




வடக்கிலே கடுமையான வறட்சி – செய்தி

தெற்கிலே வெள்ளப்பெருக்கு. மண்சரிவு. இயல்பு நிலை பாதிப்பு – செய்திகள்

இதெல்லாம் சும்மா நடக்கேல்ல. இதுக்குப் பின்னாலயும் மகிந்தற்றை அரசியல் விளையாட்டுத்தானிருக்கு.

கோத்தபாய குறைஞ்ச ஆளில்லை. அவற்றை ஏற்பாட்டிலதான் வடக்கில வறட்சியும் தெற்கில வெள்ளமுமாயிருக்கு.

நீங்கள் நம்ப மாட்டீங்கள்... இது சத்தியமாக அரசாங்கத்தின்ரை திட்டந்தான்.

மகிந்த சிந்தனையில இப்பிடியொரு ஏற்பாடிருக்கு.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதுக்கெண்டு – இதுதான் வடக்கில வறட்சி எண்டும் தெற்கில மழை எண்டும் ஒரு நிலையை உருவாக்கிறதுக்காக – பெரியதொரு நிதியை ஒதுக்கியிருக்கு.

இப்பிடியெல்லாம் நாளைக்கு செய்திகளும் ஆய்வுக்கட்டுரைகளும் தமிழ்கூறும் நல்லுலகத்தில் வரும். வருமென்ன, வந்தே தீரும்.

தமிழாக்கள் அந்த அளவுக்கு அரசியல் மேதைகளாக இருக்கினம்.

காத்தடிச்சாலும் அதுக்கொரு அரசியல் விளக்கம். காத்தடிக்காமல் விட்டாலும் அதுக்கும் அரசியல் காரணம்தான்.

பல்லுக்கொதி, தலையிடி, வயிற்றுப்பொருமல் இப்பிடி எல்லாத்துக்கும் காரணம் மகிந்த சிந்தனையோ கோத்தாபயவின்ரை திட்டமோ பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்ரை ஏற்பாடோ... ஏதோ ஒண்டுதான் காரணமாக இருக்கும்.

அப்பிடியில்லையெண்டால்.... ஏன் தலையிடி வருது? ஏன் பல்லுக்கொதிக்குது?

இப்ப இந்தக் கோடையில – ஆனி மாதப் புழுக்கத்துக்கு வேர்த்துக் கொட்டுது...

ஆனால், இதுக்கும் காரணம் கோத்தாபயவோ மகிந்த சிந்தனையோ எண்டுதான் சிவாஜிலிங்கமோ, 'எங்கள் தங்கம் சிவசிவா' விக்கினேஸ்வரனோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ சிறிதரனோ ஏன் சுமந்திரனோ சொல்லுவினம்.

ஒழுங்காக வயிற்றால போகுதில்லை எண்டு நாலு நாளாக வில்லங்கப்பட்டுக் கொண்டிருந்த அரியநேத்திரன், இதுக்கு முழுக்காரணமும் அரசாங்கத்தின்ரை திட்டமிட்ட செயல்தான் எண்டு ஒரு அறிக்கையைத் 'தயாரிச்சுக்கொண்டிருக்கிறாராம்.

போன கிழமை பிடுங்கி வைச்ச மாங்காய் அத்தினையும் அழுகிப்போச்சுது எண்டு சிவமண்ணை வந்து சுரேஷ் பிரேமச்சந்திரன் அண்ணையிட்டச் சொன்னார்.

உடன வெடுக்கெண்டு துள்ளி எழும்பின சுரேஷ் அண்ணை, தனக்குப் பக்கத்தில நிண்ட மீடியாக்காரப் பெடியனிட்டச் சொன்னார், 'இதுக்கொரு அறிக்கையை உடன தயாரியுங்கோ. இதுக்கெல்லாம் காரணம் சிங்களப் பேரினவாதத்தின்ரை திட்டமிட்ட செயல்தான். மகிந்த சிந்தனை இதை ரகசியமாக நடைமுறைப்படுத்துது. இதுக்குப் பின்னால அர்சாங்கத்தோட ஒத்துப்போகிற கட்சிகளின்ரை கைவரிசையும் இருக்குது எண்டு அந்த அறிக்கையில போடுங்கோ... அப்பிடியே அந்த அறிக்கையை டெயிலி வொஜிசுக்குக் குடுங்கோ... அவங்கள்தான் முன்பக்கத்தில கொஞ்சம் சோடிச்சுப் போடுவாங்கள்... மற்றவங்கள் அலங்கார வேலைப்பாடுகளில படு வீக்... சோடிக்கத் தெரியாதவனெல்லாம் பேப்பர் நடாத்த வந்திட்டான்...ம்.. தமிழன்ரை தலைவிதி...!'

பெருமூச்சு விட்டார் சுரேஷ் அண்ணை. அந்த நேரத்தில அவரைப்பாக்க எனக்கே கவலை வந்திட்டுது...

இந்த மாதிரியான ஒரு அரசியல் மேதையை வைச்சுக்கொண்டு ஒரு மசிரையும் புடுங்கத் தெரியாமல் இருக்கிறமே.... எண்டு என்னிலயே எனக்கு வெறுப்பு வந்திது.

இப்பிடித்தான் முந்தநாள் பவளசோதி ஏதோ மறதிக்கெடுதியில கறிக்கு உப்பை ரண்டு தரம் போட்டிட்டாள்.

இதுக்கு அவளின்ரை புரிசன் என்ன சொன்னாரெண்டு தெரியுமோ... 'நீ அரசாங்கத்தின்ரை ஆளாக மாறீட்டாயடி... அதாலதான் ஆரும் சாப்பிடக் கூடாதெண்டு கறிக்கு இப்பிடி உப்பை அள்ளிப்போட்டிருக்கிறாய்...' எண்டு பெரிய அமர்க்களம் பண்ணினார்.

பவளசோதி எவ்வளவோ சொல்லியும் அவளின்ரை புரிசன் கேக்கிறதாக் காணேல்ல. அடுத்தநாள் பாத்தால், 'அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்ட மனைவியின் சதி. மகிந்த சிந்தனையை வீட்டில் நடைமுறைப்படுத்தி, கறிக்கு இரண்டு தடவை உப்புப் போட்டு மற்றவை சாப்பிடுகிறதைத் தவிர்த்திருக்கிறார். இப்பிடியான துரோகச் செயல்களில ஈடுபடுகிற ஆக்களை மக்கள் - தமிழ் இனமானம் உள்ளவையள் இனங்காண வேண்டும்' எண்டு பேப்பர்களிலயும் இணையங்களிலயும் எழுதியிருந்திது.

பவளசோதி நாலுநாளாக அழுது கொண்டிருந்தாள். இதுக்கெல்லாம் என்ன பதிலைச் சொல்லிறதெண்டு அவளுக்கு விளங்கவேயில்ல.

புருசனைப் பற்றி அவளுக்கு நல்லாத்தெரியும். அவற்றை வெங்காயத்தனங்களையும் அவள் அறிஞ்ச ஆள்தான். ஆனால், இந்தப் புண்ணாக்குக் கதையை அக்கம் பக்கத்து ஆக்களும் அப்பிடியே விழுங்கிக்கொண்டு வில்லங்கப்பட்டுக் கொண்டிருக்கிறதைத்தான் அவளால தாங்க முடியாமல் இருக்கு.

இப்பிடியெல்லாம் சொல்லாட்டிக்கு இவை என்ன, தமிழ்த்தேசியவாதிகள்? எண்டு நீங்கள் கேட்கிறியள்...

தமிழ்த்தேசியம் எண்டால் எப்பவும் அரசாங்கத்தைப்பற்றி ஏதாவது குறையோ குற்றமோ சொல்லிக்கொண்டேயிருக்கோனும்.

அப்பிடியில்லை எண்டால் இவைக்கும் அரசாங்கத்துக்கும் இடையில ஏதோ குடுக்கல் வாங்கல் இருக்கு. ஏதோ துரோகத்தனம் நடக்குது...! எண்டுதானே அர்த்தம்.

சும்மா சொல்லக் கூடாது, நல்ல நாடகம்தான். நல்ல நடிப்பும்தான்....

இதெல்லாம் கொண்டு போய் விடுகிற இடம்... சத்தியமாக அது சுடுகாடுதான்....

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எப்படித் தீர்வு வரும்?

இலங்கையில் தமிழ் மக்களுக்கான நடைமுறைச் சாத்தியமுள்ள எந்த ஒரு தீர்வையும் பெற்றுக்கொள்ள, அரசியல் யாப்பின்படி இன்றுள்ள மாகாண சபை அடிப்படையிலிருந்தே, அதிலுள்ள அதிகாரங்களை வலுப்படுத்துவதனூடாக மேற் செல்ல முடியும். இதுதான் யதார்த்தம்.

வடக்கு மாகாண சபையை எடுத்து வைத்துக்கொண்டு அதன் மீது குந்தி இருப்பவர்கள், தீர்வு முயற்சிகளையும் செய்யாமல், மாகாண சபைக்கு இன்றிருக்கும் அதிகாரங்கள் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பயன்களையும் கிடைக்கச் செய்யாமல், வெறும் புறணிகள் பாடியபடியே காலத்தை ஓட்டி வருகிறார்கள்.

தமிழ் மக்களும், அரசை எதிர்த்துப் புறணி பாடுபவர்களையும் அரசை எதிர்த்துத் தமிழ்ப் பரணி பாடுபவர்களையும் எந்தக் கேள்விக்கும் இடம் வையாமல் நம்பி, எந்த அழிவுக்கும் தயாரானவர்கள் நாங்கள் என்றே தலையாட்டி வருகிறார்கள்.

தமிழ் மக்களின் இந்த "வீக்னெஸ்" தெரிந்துகொண்டு, "தீர்வுக்கும் அரசு விரும்புதில்லை... அபிவிருத்திக்கும் அரசு விடுகுதில்லை... மொத்தத்தில் எங்களை ஒண்டுஞ் செய்ய அவை விடுகினமில்லை..." என்று சொல்லிக்கொண்டே,

மற்றப்பக்கம் "எங்கட சம்பளங்கள் அலவன்சுகள் சரியா வருகுதா... வீட்டு வாடகைகள் அலுவலக வாடகைகள்... வாகனங்கள் தரவேணும்... பொலிஸ் பாதுகாப்புத் தரவேணும்..." என்று அவரவர் பிழைப்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு வேண்டிய தீர்வு என்று நீங்கள் கேட்பது எதை? அதற்கெனச் செய்யும் முயற்சிகள் எவை? என்று கேட்டால், "நவநீதம்பிள்ளை அம்மா பொறுத்த ஆட்களைப் போட்டு போர்க்குற்ற விசாரணையை முடுக்கி விட்டிருக்கிறா... பாத்தியள் தானே?" என்பதுதான் இவர்களிடமுள்ள பதில்.

இது, வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்குக்கு விலை சொல்லுகிற விளையாட்டென்று தெரிந்து கொண்டே எமது மக்களும், "அரசுக்குக் கழுத்து இறுகினால் எங்களுக்கு அடிவயிறு குளிரும், அது போதும்" என்பது போல் நடந்து கொள்கிறார்கள்.

"ஜனாதிபதி சொன்னபடி நடக்கவில்லை", "ஆளுநர், செயலாளரை மாற்றவில்லை", "ஆளுநர் ஒண்டுக்கும் விடுகிறார் இல்லை", "ஆமி இருக்கும் வரை இங்கு எதுவும் செய்ய ஏலாது" என்று சொல்லிக்கொண்டே ஐந்து வருடத்தை முடித்து, இதே அரச எதிர்ப்புத் தணலை ஊதிவிட்டுக்கொண்டே அடுத்த ஐந்து வருடத்துக்கும் மாகாண சபையில் ஏறிக் குந்திவிடலாம் என்பதில் "தங்கத் தலைவர்களுக்கு" முழுநம்பிக்கை!

இந்த அரச எதிர்ப்பு போதையில் மயங்கிக்கிடக்கும் மக்களுக்கும் மக்களுக்கு உண்மையறிந்து உரைக்க வேண்டிய புத்திஜீவிகளுக்கும் ஊடகங்களுக்கும் இந்த மாகாண சபை முறைக்கு மேலான ஒரு தீர்வு எப்படி வரும் என்ற கேள்வியை எழுப்பவே தோன்றவில்லை என்பதுதான் நமது சூழலினுடைய சோகம்!

13வது திருத்தத்தை மாற்றி அதைவிடவும் கணிசமான அளவு சிறப்பான ஓர் அரசியல் யாப்பு ஏற்பாடுகள் இப்போதைக்கு – இன்னும் சில ஆண்டுகளுக்குள் கிடைப்பதற்கு ஏதாவது வாய்ப்புக்கள் உண்டா?

அப்படியான அரசியல் யாப்பு மாற்றத்தை உருவாக்குவதற்கு தவிர்க்கவியலாத வகையில் தீர்மானகர சக்திகளாக இருக்கக் கூடிய பெரும்பான்மை மக்களிடத்தில் இணக்கத்தை ஏற்படுத்தும் விதத்திலா இந்தத் தலைவர்களின் மற்றும் தமிழ் ஊடகங்களின் நடத்தைகளும் வீரப்-பேச்சுக்களும் இருக்கின்றன?

- ஆசிரியர்

## தேசிய ஐக்கியத்தை வலியுறுத்தி சமூக ஒருமைப்பாட்டு வாரம் அமுல்

சமூக ஒருமைப்பாட்டு வாரம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது. சமூக ஒருமைப்பாட்டினூடாக தேசிய ஐக்கியம் என்ற தொனிப் பொருளில் இவ்வருடம் சமூக ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் முன்னெடுக்கப் படவிருப்பதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் முக்கிய அம்சங்களாக வடமாகாணத்தில் கிளிநொச்சியிலும், சப்ரகமுவ மாகாணத்தில் குருவிட்ட பிரதேசத்திலும் அமைச்சின் மத்திய நிலையங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன.

ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் எதிர்வரும் 14ஆம் திகதி பொலன்நறுவைக்கான ஆய்வு சுற்றுலாவுடன் ஆரம்பமாகின்றது 15ஆம் திகதி கிளிநொச்சியில் மத்திய நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மக்களை பொதுவிடயங்களில் உள்ளடக்கி சகலரையும் ஒரு மட்டத்திற்கு கொண்டுவரும் நோக்கிலேயே சமூக ஒருமைப்பாட்டு வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

கணவனை இழந்த பெணகள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறாத மாணவர்கள் என பல்வேறு தரப்பினர் பல மட்டங்களில் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர்.

இவ்வாறான விடயங்களைத் தடுப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. ஒருமைப்பாட்டு வாரத்தில் புலமைப்பரிசில பரீட்சையில் தோற்றவிருக்கும் வசதியற்ற மாணவர்களுக்கு செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன. இவற்றின் ஊடாக சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கப்படுவதைத் தடுக்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதமாக, மொழிச் சங்கங்கள் மூலம் சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. ஒவ்வொரு மொழிச் சங்கத்திற்கும் அமைச்சின் ஊடாக 150000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் கடற்கரையோரத்தை மையப்படுத்தி பட்டம் விடும் போட்டிகளும் இவ்வருடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தின் இறுதி நாளான 21ஆம் திகதி சமூக ஒருமைப்பாட்டு தேசிய மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பொதுஇடத்தில் மது அருந்த அனுமதி அளித்தது நீதிமன்று

(கொழும்பு)

பொது இடத்தில் மது அருந்தும் சுதந்திரம் மக்களுக்கு உள்ளதென பூகொட நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான இந்திக கலிங்கவன்ஸ நேற்றுமுன்தினம் நீதிமன்றில் கூறினார்.

மதுவருந்திவிட்டு நடந்து திரிபவர்களை கைது செய்ய முடியாது. பிழையான முறையில் நடந்து பொதுமக்களுக்கு தொந்தரவு செய்தால் மட்டுமே அவர்களை கைது செய்யலாம் என்றும் அவர் கூறினார்.

பொது இடத்தில் மது அருந்தியமைக்காக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களை விடுதலை செய்துவிட்டே நீதவான் இந்திக கலிங்கவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## அரியாலையில் வளர்ப்புமாடுகள் இறைச்சிக்கு திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலைப் பகுதியில் வீடுகளில் உள்ள வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த சில மாதங்களாகவே அரியாலை மத்தியிலுள்ள எமது வீடுகளில் வளர்க்கப்பட்டுவரும் பசுமாடுகள் இரவு வேளைகளில் காணாமல் போகின்றன. சில நாட்களின் பின்னர் அவற்றின் தலைகள் மட்டும் புதர்களில் காணப்படுகின்றன. இது குறித்து பொலிஸாரிடம் முறையிடச் சென்றால் அவர்கள், திருடர்கள் தொடர்பில் யார் மீதும் சந்தேகம் உள்ளதா? என்று கேட்கின்றனர். இதற்கு உரிய பதிலளிக்க முடியாத நிலையில் முறைப்பாட்டையும் பதிவுசெய்ய முடியாதுள்ளது என்று தெரிவிக்கின்றனர். அரியாலையில் எட்டிற்கும் மேற்பட்ட வீடுகளில் பசுமாடுகள் திருடப்பட்டிருக்கின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

– க.பொ.த. (சா/த) பரீட்சை –

## விசேட தேவையுடையோருக்கு சலுகைகள் வழங்கத் திட்டம்

க.பொ.த (சா/த) பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுள் விசேட தேவைகள் உடைய மாணவர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

அதற்கிணங்க, சலுகையை எதிர்பார்க்கும் விசேட தேவையுடைய மாணவர்கள் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

விண்ணப்பதாரியின் பெயர் குறிப்பிடப்படுவதோடு பாடசாலைப் பரீட்சார்த்தியாயின் பாடசாலை அதிபர் மூலமாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்தியாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமாகவும் அனுப்பப்படுவதோடு விண்ணபத்தோடு மாணவரின் குறைபாட்டுத் தன்மையைக் காட்டும் மருத்துவ அறிக்கையையும் சிகிச்சை பெறும் வைத்தியரின் பெயர், முகவரியும் குறிப்பிட்டு அவருக்குத் தேவைப்படும் உதவி என்னவென்று குறித்தும் அனுப்ப வேண்டுமென வேண்டப்படுகின்றனர்.

## இலங்கைக்கு கடன்வழங்கல் முதலிடம் பிடித்தது ஜப்பான்

(கொழும்பு)

இலங்கைக்கு 2014ஆம் ஆண்டு அதிக கடன்களை வழங்கிய நாடுகள் வரிசையில் ஜப்பான் முதலிடம் பிடித்துள்ளது.

புதிய பாலம் ஒன்றுக்காக 342.8 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குவதுடன் இந்த முதல் இடத்தை ஜப்பான் பெறுகிறது.

இந்தநிலையில் கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் இலங்கை, 678.2 மில்லியன் டொலர்களை பல நாடுகளில் இருந்தும் கடன்களாக பெற்றுள்ளது.

இதன்படி சீனாவிடம் இருந்து 300 மில்லியன் டொலர்களும் குவைத்திடம் இருந்து 10 மில்லியன் டொலர்களும் அடங்குகின்றன.

ஜப்பானின் கடன்கள் யாவும் வங்கி வட்டியின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

குவைத்தின் கடன் 0.5 வட்டி வீதத்தில் 15 வருட திருப்பிச் செலுத்துகை உடன்படிக்கையில் வழங்கப்படுகின்றன.

இதனைத்தவிர ஈரான், ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்தியா உட்பட்ட நாடுகளில் இருந்தும் இலங்கைக்கு கடன்கள் கிடைத்துள்ளன.

இதேவேளை 2014ஆம் ஆண்டு இலங்கை 1279 மில்லியன் டொலர்களை 31சதவீத வட்டியில திருப்பி செலுத்தவேண்டியுள்ளது.

# விடாத போராட்டமும் முடியாத அவலமும்!

**இலங்கை அரசின் இனவாதப் போக்கு காரணமாக ஈழம் என்றோம் வடக்கு-கிழக்கே கிடைத்தது. மீண்டும் ஈழம் என்றோம் வடக்கு வேறாகவும் கிழக்கு வேறாகவும் ஆனது. மீண்டும் விடமாட்டோம் என்ற கருத்தே பலராலும் முன்வைக்கப்படுகிறது. இன்று 13ஆவதை பெறுவதற்கே பாடாய் படுகின்றோம்.**



## ஸ்ரனிஸ், தமிழ்நாடு

புலம்பெயர்ந்து வாழும் சிலர் சில அமைப்புகளை உருவாக்கி தற்போதைய சூழலில் பல கருத்துக்களை கூறிவருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் நடைமுறைக்கு சாத்தியமற்ற பல கருத்துக்களை கூறி வருவதுடன் அழிவுற்று இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து கொண்டு இருப்பவர்களை மீண்டும் ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு கொண்டு செல்லும் நிலைமைகளையே உருவாக்குகின்றனர்.

இலங்கை அரசின் இனவாதப் போக்கு காரணமாக ஈழம் என்றோம் வடக்கு-கிழக்கே கிடைத்தது. மீண்டும் ஈழம் என்றோம் வடக்கு வேறாகவும் கிழக்கு வேறாகவும் ஆனது. மீண்டும் விடமாட்டோம் என்ற கருத்தே பலராலும் முன்வைக்கப்படுகிறது. இன்று 13ஆவதை பெறுவதற்கே பாடாய் படுகின்றோம்.

இலங்கைத் தமிழ்க்கட்சிகள், தமிழக கட்சிகள், புலம்பெயர் அமைப்புகள் என இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவுத் தளம் இயங்குகிறது. ஆனால் இதில் புலம் பெயர் அமைப்புகளின் ஆதிக்கம் அவர்களது கருத்தியல் மற்றைய வற்றில் ஆட்சி செலுத்துவதை அவதானிக்கலாம்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளோ போராட்டங் களோ நடைமுறைக்கு சாத்தியமான கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இது விடயமாக ஈடுபடுபவர்கள் மக்களை உசுப்பேற்றும் நடைமுறைக்கு சாத்தியமற்ற கருத்துக்களை கூறுவதன் மூலம் தமிழர் பிரச்சினை மேன் மேலும் சிக்கல் நிறைந்ததாகவே அமையும்.

தற்போது தமிழகத்திலும் புலத்திலும் இலங்கையில் உள்ள சில தமிழ்க் கட்சிகளும் நடாத்தும் போராட்டங்கள், கையாளும் சொற்பதங்கள் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான செயற்பாடுகளாய் இல்லை. இவை இலங்கை அரசை மேலும் தமிழர்கள் மீது சந்தேகப் பார்வையை உண்டாக்குவதாகவே உள்ளது.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அரசியல் பார்வை இருக்கலாம். இதில் தமிழக கட்சிகள், இலங்கைத் தமிழர்கள் கட்சிகள், புலம்பெயர் அமைப்புகள் எதுவாயினும் இலங்கைத் தமிழர் தீர்வு தொடர்பாக நடைமுறைச்சாத்தியமான ஒரு பொதுக்கருத்துக்குள் வந்தால் மட்டுமே தீர்வு சாத்தியமாகும். இவர்கள் பொதுக்கருத்துக்குள் வருவார்களா என்பது நடக்காத ஒன்றே. ஏனென்றால் முப்பது வருடங்களுக்கு மேலாக உள்ள பிரச்சினையை நீட்டி பெரிதாக்கிய பங்கு இவர்களில் பலருக்கும் உண்டு. இவர்கள் இதை இன்னும் இழுபட வைக்கவே விரும்புகிறார்கள்.

குறிப்பாக வடக்கு கிழக்கை பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகளிடையே அரசியல் தீர்வு தொடர்பாக ஒத்த கருத்து இல்லை. சில கட்சிகள் அரசிற்கு ஆதரவாகவும் சில கட்சிகள் இன்னமும் புலிகளின் கருத்தியலையும் கொண்டிருக்கின்றனர். இந்த முரன்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமான விடயமாக அமைந்துவிட்டது.

அரச ஆதரவுகதையை அல்லது அரச எதிர்ப்பு கதையை கேட்டுக் கேட்டு மக்களுக்கு காது செவிடாகாக் குறையாக இருந்தாலும், மக்கள் அரச எதிர்ப்புக் கதையை பெரிதும் ரசிக்கின்றனர். அவர்கள் இலங்கை அரசின் செயற்பாடுகளை விரும்பாத வர்களாகவே வாழ்கின்றனர். இந்தப் போக்கு அவர்களுக்கு ஆபத்துகளையே உருவாக்கி வருவதை அவர்கள் உணர்ந்திருப்பதாகவும் தெரியவில்லை.

மக்களின் மனநிலை அப்படி இருக்கும் போது அரச எதிர்ப்பு தமிழ் கட்சிகள் தங்களது மாகாணசபைக் கதிரைக் கனவுகளையும், பாராளுமன்ற கதிரைக் கனவுகளையும் சும்மா எதையாவது பேசிக்கொண்டே பெறுவதற்கான வாய்ப்புகளே உள்ளன.

அரச ஆதரவுக்கட்சிளை மக்கள் தேர்தல் நேரத்தில் மட்டுமே ஓரங்கட்டுகிறார்கள். மற்றபடி அவர்களிடம் மக்கள் தங்களது பல விடயங்களுக்காகச் சென்று வருவது உண்டு. இடம்மாற்றம், வேலைவாய்ப்பு, அபிவிருத்தி தொடர்பானவைகளை அங்கு சென்று சாதித்துவிடுகிறார்கள். அவர்களும் விழுந்து விழுந்து உதவிகள் செய்கிறார்கள்.

இன்று அரச எதிர்ப்பு கட்சியினர் மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக பேசுவதையும் காரசாரமான அறிக்கைகள் விடு தையும் பெரிதும் ரசிக்கிறார்கள். இந்த ரசனை காரணமாக அரச எதிர்ப்புக் கட்சியினர் தங்களது சொந்த வளங்களைப்பெருக்கி தங்களது தனிப்பட்ட வாழ்கையை வளப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் இன்று வரை மக்களுக்கு ஒன்றும் செய்யாத வர்களாகவே உள்ளனர்.

அரசாங்கத்தின் தவறுகளை மூலதன மாக்கி இந்த எதிர்ப்புக் கோஷக் கட்சிகளின் பிழைப்பு நடக்கிறது. யுத்தம் முடிவடைந்து நான்காண்டுகளுக்கு மேலாகியும் அரசாங்கம் பிரச்சினையை தீர்த்து வைக்க நினைக்கவில்லை. வடக்கு மாகாண சபைக்கான அதிகாரத்தை கொடுப்பதிலும் அதற்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழர்கள் வாழ்வு கண்டு வேதனைப் படும் சமூக ஆர்வலர்கள், மாற்றுக்கருத் துள்ளோர் மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என அல்லும் பகலும் எண்ணிக்கொண்டி ருப்போருக்கு தற்போதைய சூழல் தகிடுதத்தங்கள் ஒவ்வாதவையாகவே காணப்படுகிறது. இந்த உணர்ச்சியூட்டும் அரசியலில் மக்களை மீட்க என்ன வழி எனத் தேடித் தேடிக்கொண்டே இருக்கின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழகக் கட்சிகளின் பங்கு காத்திர மானவையாக 1983களில் இருந்த தென்னவோ உண்மை. ஆனால் இன்று தங்களை வளப்படுத்திக்கொள்ள இதனைப் பயன்படுத்துகிறார்கள் என்ற கருத்து பரவலாகி உள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக சில கட்சிகளும் அவர்களது தொலைக்காட்சிகளும் மிகவும் மிகைப்படுத்திய கருத்துக்களையே சொல்கின்றனர். இவர்கள் தங்களது அரசியல் இருப்பிற்காக மக்களை உணர்ச்சியூட்டும் செயல்களை நன்கு செய்கிறார்கள். இவர்களுக்கு புலம் பெயர் அமைப்புகள் சிலவற்றின் “சூட்கேஸ் ஆசீர்வாதமும்” உண்டு.

இவர்களும் இலங்கைத் தமிழர் பிரச் சினையில் ஒரு பொதுக்கருத்தில் இல்லை. பொதுவான போராட்டங்களாக வும் நடத்தியதில்லை. ஆளாளுக்கு ஒரு போராட்டம். இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான போராட்டங் களை நடாத்துபவர்கள் இடையே “உன்னைவிட நான்தான் பெரிய ஆதரவாளன்” என்ற போட்டி மனப்பான்மை காணப்படுவதையும் அவதானிக்கலாம். எல்லாம் புலம்பெயர் நிதிவளப் பெருக்கத்தின் காரணம்தான்.

இவர்கள் தங்களை மாற்றிக்கொண்டு நடை முறைக்குச் சாத்தியமானதொரு திட்டத்தை வகுத்து எல்லாக் கட்சிகளும் பொதுத்தளத்தில் நின்று போராடி இந்திய மத்திய அரசை வற்புறுத்தினால் ஒழிய இலங்கைத் தமிழர் வாழ்வில் ஏதும் இவர்களால் நடந்துவிடப் போவதில்லை.

இன்று இலங்கையில் உள்ள அரச எதிர்ப்பு தமிழ்க் கட்சிகள் இடையேயும் தமிழகத்தில் உள்ள சில அமைப்புகளிடையேயும் புலம்பெயர் அமைப்புகளின் ஆதிக்கம் வெகுவாக உள்ளது. இன்றுள்ள தொழில்நுட்பமும் அவர்கள் தொடர்பு கொள்ள பல வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.. எந்த அமைப்பு நினைத்தாலும் தமிழகத்தில் உள்ள அவர்களது தொடர்புகளை வைத்து “ஸ்கைப்” வழியாக பத்திரிகையாளர்கள் சந்திப்பை நடத்துகிறார்கள். அவர்களது கருத்துக்களை எந்த தயக்கமுமின்றி பரப்புகிறார்கள். தமிழக அரசும் இந்த ஆதரவுப் போட்டியிலிருப்பது அவர்களுக்குச் சாதகமாக உள்ளது.

பொதுவாக புலம்பெயர் அமைப்புகள் “தமிழகம்தான் எங்களுக்கு நம்பிக்கை யாக உள்ளது நீங்கள் நம்பிக்கையுடன் செயற்பட்டால் நாங்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம்” என பச்சையாகவே சொல்கிறார்கள்.

**இன்று அரச எதிர்ப்புக் கட்சியினர் மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக பேசுவதையும் காரசாரமான அறிக்கைகள் விடுவதையும் பெரிதும் ரசிக்கிறார்கள். இந்த ரசனை காரணமாக அரச எதிர்ப்புக் கட்சியினர் தங்களது சொந்த வளங்களை பெருக்கி தங்களது தனிப்பட்ட வாழ்கையை வளப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் இன்றுவரை மக்களுக்கு ஒன்றும் செய்யாதவர்களாகவே உள்ளனர்.**

இவர்களது கருத்துக்கள் பொதுவாக “தனிஈழம் விட்டால் வேறு தீர்வில்லை; வேறெதையும் முயற்சிப்பதற்கில்லை” என்பதாகவே காணப்படுகிறது.

வெளிநாட்டில் உள்ள நெடியவன், வினாயகம் போன்றோர் இலங்கையில் புலிகளை மீண்டும் வேரூன்றச் செய்ய பல முயற்சிகள் மேற்கொண்டனர். அரசாங்கம் உடனுக் குடன் முறியடிக்கிறது. தொடர்ந்தும் முயல்கின்றனர். இவர்களது இத்தகைய செயற்பாடுகள் இலங்கைத் தமிழர்களுக்குத் தொடர்ந்தும் ஆபத்தானது என்பதை தமிழர்களால் தமிழர்க்குச் சொல்லமுடியவில்லை.

மாற்றுவழி தேட முயல்வோர் எப்படியேனும் இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசரமானது. இலங்கையில் இன்னும் ஏழைகளும், இல்லாதோரும், தொழில் தேடி அலைவோரும் சாதிவெறிக்குள் அகப்பட்டோரும், வேற்றுமை பார்க் கப்படுவோரும் இருக்கிறார்கள் என்பதையும் எல்லோரும் உணர வேண்டும்.

# பிரச்சினைகளை மூடிமறைப்பதற்கு அமைப்புக்களை பயன்படுத்தும் அரசு

## குற்றஞ்சாட்டுகிறார் ரில்வின்



(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக சில அமைப்புகளை பயன்படுத்துவதாகவும் கண்டியில் கார் பந்தயத்தை நடாத்த வேண்டாம் என மாநாயக்க தேரர்கள் கோரிய போதும் அரசாங்கம் அதனை நிறுத்தவில்லை எனவும் ஜே.வி.பி.யின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் நடாத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் பொதுபலசேனா இயங்கி வருகிறது. குறிப்பாக பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளில் உள்ள சிலரது ஆதரவு அந்த அமைப்புக்கு கிடைத்து வருகிறது.

அதேவேளை நாட்டின் சுகாதார சேவையில் பாரதூரமான நெருக்கடி உருவாகியுள்ளது. தாதி மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்கள் இடையிலான நிர்வாக ரீதியான பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்து வைக்காததே இந்த நெருக்கடிக்கு காரணம்.

குருநாகல், பேராதனை வைத்தியசாலைகளில் பிரச்சினைகள் ஏற்பட்டதுடன் தற்போது ராகம வைத்தியசாலையில் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

சுகாதார ஊழியர்கள் சுதந்திரமான மனநிலையில் தமது தொழிலில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்கள் கடும் மன அழுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் நோயாளிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தனியார் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற முடியாத வறிய நோயாளிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# இன முரண்பாடுகள் ஏற்பட முஸ்லிம் காங்கிரஸே காரணம்

## என்கிறார் ஞானசாரதேரர்



(பெய்ரூட்)

நாட்டில் இன முரண்பாடுகள் ஏற்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே காரணம் என பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர தெரிவித்துள்ளார்.

அண்மையில் அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற குற்றச் செயல்களின் பின்னணியில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி செயற்பட்டிருக்கலாம் என அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணைகளில் பங்கேற்று திரும்பியதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா நாட்டின் நலனுக்காக வெளியிடும் கருத்துக்களை நிறுத்தப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான கருத்துக்களை வெளியிடப் போவதாகத் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் பேருவளை, அளுத்கம பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு யார் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்பதனை பல்வேறு தரப்பினரும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தனர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

# மூடப்பட்டது ரஜரட்ட பல்கலை

ரஜரட்டை பல்கலைக்கழகம் நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் கல்விசாரா செயற்குழுவினர் மாணவர்களுக்கான விவகாரங்களில் இருந்து விலகுவதாக அறிவித்ததன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேநதர் பேராசிரியர் ரஞ்சித் விஜேவர்தன குறிப்பிடுகின்றார்.

எனவே நாளை மாலை 4 மணிக்கு முன்னர் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியேற வேண்டும் என உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

# அரச சேவை ஆணைக்குழுவை நியமித்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு அமுலில் இருக்கும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரச சேவை ஆணைக குழுவை நியமித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சத்யா ஹெட்டிகே நியமிக்கப்பட்டுள்ளார்.

எஸ்.சீ.மாணப்பெரும, ஆனநத செனவிரத்ன, எஸ்.எச்.பததிரண, எஸ்.தில்லை நடராஜா, எஸ்.ஏ.மொஹமட் நஹியா, காந்தி விஜேதுங்க, சுனில்.ஏ.சிறிசேன, வைத்திய நிபுணர் சொய்சா குணசேகர ஆகியோர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.



அரசியல் அமைப்பின் 55 ஆவது விதிகளின் படி அரச நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் அரச ஊழியர்களின் ஒழுங்கு விதிகள் போன்ற அனைத்து அதிகாரங்களும் இந்த அரச சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சரவை செயலாளர் சுமித் அபேசிங்க, ஜனாதிபதியின் செயலணி பிரதானி காமினி சேதர செனரத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சனத்திற்கு சத்திரசிகிச்சை



ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான சனத் ஜயசூரியவிற்கு அவசர சத்திரகிசிசை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திடீரென நோய் வாய்ப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான சனத் ஜயசூரியவிற்கு இவ்வாறு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆபத்து எதுவுமில்லை எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சீனா சென்றுள்ள பசில் உதவிப் பிரதமருடன் பேச்சு



சீனாவுக்கான விஜயம் ஒன்றை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கொணடுள்ளதுடன், அந்நாட்டு உதவிப் பிரதமர் வெஹ் யாங் (Wang Yang) குடன் இலங்கையின் நிலைமைகள் குறித்து விரிவான பேச்சுக்களை நடாத்தியிருப்பதாக சீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு சீனா விரும்புவதாக இந்தச் சந்திப்பின்போது தெரிவித்த சீனா உதவிப் பிரதமர், இரு நாடுகளின் ஜனாதிபதிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுக்களை இரு நாடுகளும் கூடிய விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்த அவர், இலங்கையில் சீனாவின் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

# இனவாதத்தை ஒழிப்பதற்கு புத்திசாலி தலைவர் வேண்டும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

புத்திசாலித்தனமான தலைவர்களாலேயே இனவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இனப்பற்று எனக் கூறிக் கொண்டவர்கள், அளுத்கம பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையஙகளில் இருந்த பொருட்களை வெளியில் எடுத்தவர்கள், அவற்றை தமது வீடுகளுக்கு கொண்டு சென்றுள்ளனர். இது சமூகத்திற்குள் ஏற்பட்டுள்ள நோய்.

புத்திசாலிகளுக்கும், புத்திசாலித்தனமான தலைவர்களுக்குமே இந்த நோயை சமூகத்தில் இருந்து குணப்படுத்த முடியும்.

சிலர் தமது தனிப்பட்ட நோக்கங்களை இனவாத பிரச்சினையாக்க முயற்சித்து வருகின்றனர். அந்த சேனா, இந்த சேனா என்று பல பக்கங்களில் இருந்து சேனை உருவாகி வருகின்றது. கடந்த காலங்களில் இந்த சேனாக்கள் எதுவும் இருக்கவில்லை.

சேனாக்கள் இணைந்து நாட்டை பிளவுபடுத்த முயற்சித்து வருகின்றன.

அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற அழிவுகளால் 2 ஆயிரம் மில்லியன் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு மாத காலத்திற்குள் அரசாங்கம் இந்த அழிவுகளை சீர்செய்து கொடுக்கும். சிலரது புத்திசாலித்தனமற்ற செயல்களால் இந்த அழிவு ஏற்பட்டது. 52 பேர் சிறையில் உள்ளனர். அவர்களை பார்ப்பதற்குக்கூட எவருமில்லை.

பேருவளை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொசன் தோரணத்தைக்கூட காட்சிப்படுத்த முடியாது போனது. சிலர் நன்றாகச் சாப்பிட்டு, ஆடைகளை அணிந்து மகிழ்ச்சியாக இருப்பதை பார்ப்பவர்கள் தாமும் அப்படி இருக்க முயற்சிப்பதில்லை. பொறாமைப்படுகின்றனர்.

புத்த பகவான் வாழ்ந்த காலத்திலும் இப்படியான அழிவுகளை ஏற்படுத்தும் நபர்கள் இருந்தனர். நாம் சிலவற்றை புதிதாக நிர்மாணிக்கும் போது சிலர் அவற்றை உடைத்து போடுகின்றனர்.

கடைகளை உடைத்து அவற்றை வேடிக்கை பார்த்து மகிழ்ச்சியடைகின்றனர் எனவும் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# மரங்களுக்கு கீழான கல்விச் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வெற்றி பெற்றுள்ளோம்

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் போது பெருமளவில் அனைத்துப் பாடசாலைகளிலும் கல்விச் செயற்பாடுகள் மரங்களுக்கு கீழேயே நடைபெற்று வந்தது இதனை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் கடந்த சில ஆண்டுகளாக நாம் செயற்பட்டதன் பயனாக இன்று அந்த இலக்கில் நாம் வெற்றிபெற்றுள்ளோம் என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சி ஆனைவிழுந்தான் ஐயனார்புரம் அ.த.க. பாடசாலையில் 56 இலட்சம் ரூபா செலவில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் சேவாலங்கா நிறுவனத்தினரால் அமைக்கப்படவுள்ள வகுப்பறை கட்டட தொகுதிக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கிளிநொச்சியின் கல்வித்துறையில் கடந்த சில ஆண்டுகளாக செலுத்திய அதிக அக்கறை காரணமாக இந்த மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பெருமளவு பாடசால்லைகள் வகுப்பறைக் கட்டடங்களை பெற்றுள்ளன.

ஒரு சமூகத்தை கல்வியில் முன்னேற்றிவிட்டால் அந்தச் சமூகம் தனது எல்லாத் துறைகளிலும் இயல்பாகவே முன்னேற்றம் கண்டுவிடும். அந்த வகையில் நாம் அதிகளவு முக்கியத்துவம் கல்விக்கு வழங்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் இதில் வெற்றியும் கண்டுள்ளோம். எனவே தொடர்நதும் இந்த மாவட்டத்தின் கல்விக்காக எங்களாலான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் நடேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேள், பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரகலாதன் மற்றும் பலா கலந்துகொண்டனர்.

## பரிசளிப்பு விழா

யாழ்.இந்துக் கல்லூரியின் 2014 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை 9 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் ஆர்.விக்னேஸ்வரனும், அவரது பாரியார் திருமதி செந்தூர் செல்வி விக்னேஸ்வரனும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் இந்நிகழ்வில் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி செந்தூர் செல்வி விக்னேஸவரன் வழங்கி கௌரவிப்பார். (எஸ்.பி)

## மீன்பிடி படகுகள் வழங்கல்

யாழ்.சமூக மேம்பாட்டுநிறுவனம் பச்சிலைப் பள்ளி பிரதேசசெயலர் பிரிவில் வாழ்வாதார உதவித்திட்டத்தின் ஊடாக மீனவர்களுக்கு 21 மீன்பிடி படகுகளை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் மு.ப.10 மணிக்கு அல்லிப்பளை கடற்கரையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர். பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர். மற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள் உட்பட பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். இதில் கிளாலி மீனவர்களுக்கு 6 படகும், அல்லிப்பளைக்கு 2, புலோப்பளைக்கு 1, சங்கத்தார்வயலுக்கு 12, படகுமாக 21, மீன்பிடிப் படகுகள் வழங்கப்பட்டன. (37)

## அதிபர் அலுவலகம் விஷமிகளால் சேதம்

(அச்சுவேலி)


அச்சுவேலி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இரவு சில விஷமிகளால் அதிபர் அலுவலகத்தின் சில ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலையின் வேறு சில சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பாடசாலை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நாளாந்தம் பாடசாலை நடைபெறுவதைப் போன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை சென்றிருந்த வேளை அதிபர் அலுவலகத்தின் சில கண்ணாடிகள் உடைக்கப்பட்டும், சிற்றுண்டிச்சாலையின் கதவுகள் சேதப்படுத்தப்பட்டும், வேறு சில சொத்துக்களுக்கும் சிறியளவிலான சேதங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததையும் அவதானித்த பாடசாலை நிர்வாகத்தின்ர் அச்சமடைந்தனர்.

இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலி ஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

## புதிய நிழற்குடைகள் அமைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிட வரும் பொது மக்களுக்காக புதிய நிழற்குடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மிக நீண்ட காலமாக தீர்க்கப்படாது காணப்பட்ட இப்பிரச்சினைக்கு யாழ். மாநகர சபை தீர்வு கண்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகம் பார்வையாளர்கள் உட்செல்லும் வாயில்களை பலமுறை மாற்றி வந்த நிலையில் அண்மைக் காலமாக வைத்திய சாலை வீதியின் புதிய வைத்தியசாலை கட்டடத்திற்கு அண்மையிலுள்ள வாயிலை பயன்படுத்துகின்றது. இப்பகுதியில் நண்பகல் வேளையில் சிறுவர்கள், முதியவர்கள் என அனைவரும் கொளுத்தும் வெயிலில் காத்து நின்று தமது உறவுகளை பார்வையிட்டனர்.

தற்போது வைத்திய சாலைக்கு வரும் பார்வையாளர்களின் நலன் கருதி யாழ்.மாநகர சபையினர் மிக நீளமான நிழற்குடையினை அமைக்க ஆரம்பித்துள்ளனர். (இ)

## ரமழான் நற்சிந்தனை

எந்த மனிதர் ரமழான் மாதத்தை அடைந்தும் தன் பாவங்களுக்காக மன்னிப்பை பெறவில்லையோ அவன் நாசமடைவான். நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து சொல்லாதவனும், வயோதிப தாய், தந்தையரை கவனிக்காதவனும் நாசமடைவான்.

நூல் - ஹாகிம்.



## திருட்டு முயற்சி முறியடிப்பு திருடர்கள் தப்பியோட்டம்

வரணி வடக்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு திருடுவதற்கு வந்தவர்களின் முயற்சி பலனளிக்காததால் தப்பியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில் கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் வீட்டு யன்னல் பகுதியூடாக உள் நுழைய திருடர்கள் முயன்றவேளை வீட்டு உரிமையாளர் சத்தமிட திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.

இத்திருட்டு முயற்சிக்குப்பின் அப்பகுதி மக்களிடையே அச்ச உணர்வைக் காண முடிகிறது. இதேவேளை அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் இரவு உற்சவம் நடைபெற்றுவருவதால் மக்கள் ஆலயத்திற்குச் சென்று இருப்பார்கள் என்று திருடர்கள் திருட்டு முயற்சியை மேற்கொண்டிருக்கலாமென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (150)

## முரசின் இன்றைய பலன்



(04.07.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஆனிமாதம் 20 ஆம் திகதி.
சப்தமி / சித்தாமிர்தம்.
உத்தர நட்சத்திரம் மு.இ. 08.40 வரை. பின் அத்தம்.
இராகு காலம் 10.27 - 11.57 வரை. சுபநேரம் 05.57 - 07.27 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொலைபேசி மின்சார புதிய இணைப்புக்கள் பொருத்தப்படல், மிகுதிப்பணம் பெறுவதில் சச்சரவு ஏற்பட்டு கைகலப்பாக மாறும் நிலை. |
| ரிஷபம் | குளவி, மயிர்க்கொட்டி, நாய்க்கடியின் தாக்கத்தினால் தேகசுகம் பாதிக்கப்படல், அநாமதேய தொலைபேசி மிரட்டலினால் உள்ளம் பதகளிப்படைதல். |
| மிதுனம் | புதிய மனை அமைக்க ஏற்ற நிலத்தைதெரிவு செய்ய சோதிடரின் உதவியை நாடல், பத்திரங்களில் ஒப்பமிட முன் அதன் நம்பகத்தை நன்றாக பரிசீலனை செய்யுங்கள். |
| கடகம் | பரீட்சை சித்தியினால் வெளிநாட்டில் புலமைப்பரிசில் பெற்று உயர்கல்விக்குச் செல்லல், விளம்பரப்படுத்தப்பட்ட காணி விற்பனை சம்பந்தமாக சந்தேகம் கொள்ளல். |
| சிம்மம் | பிறர் விடயத்தில் அனாவசியமாக தலையிட்டு மனத்தாங்கலை ஏற்படுத்த வேண்டாம், வருமானம் க்ச்சிதமாக அமைவதினால் மகிழ்வு தக்க வைத்தல். |
| கன்னி | அனுமதி கிடைக்க பணம் கோரியதால் வேதனையில் தவித்தல், பதவி நிரந்தரமாக்க போதிய கல்வித் தகைமை இன்மை என கைவிரித்தல். |
| துலாம் | எவருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுப்பதைக் கைவிடுங்கள், அரசுத்துறையில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். |
| விருச்சிகம் | நேர்முகத்தேர்வு மனதிற்கு ஆறுதல் தந்ததால் பதவி கிட்டும் என எதிர்பார்க்கை, விழாக்களில் கலந்து சிறப்பிக்க தம்பதியர் சகிதம் பங்கு பற்றல். |
| தனுசு | ஆடம்பரச் செலவுகளைக் கைவிட்டு சேமிப்பை ஊக்கப்படுத்துவீர்கள், விவாகமின்றி இருக்கும் முதிர்கன்னிகளை நினைத்து கலக்கமடைதல். |
| மகரம் | உரியநேரத்தில் மனைக்கு வந்ததால் திருடர்களின் திருட்டு முயற்சி அற்றுப்போதல், அரசியல் விமர்சனம் செய்ய முயன்றவேளை நண்பருடன் முரண்பாடு ஏற்படல் |
| கும்பம் | எதிர்கொள்ளும் போட்டிகளை, முரண்பாடுகளை சாதுர்யமாக சமாளித்து விடுங்கள், உதவப்போய் வீண் உபத்திரங்களில் சிக்கிக் கொள்ளும் அபாயமுண்டு. |
| மீனம் | உங்கள் முன்னேற்றப்பாதை திறக்க நாடிவரும் சந்தர்ப்பத்தை நழுவிச் செல்ல விடவேண்டாம், அவமரியாதை ஏற்படுத்த முயன்ற நபரின் முயற்சியை சமயோசிதமாக அற்றுப்போகச் செய்தல். |

# காலிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் ஆரம்பம்

## முதல் போட்டியில் பிரான்ஸ் - ஜேர்மனி அணிகள் மோதல்

உலக கிண்ணக் கால்பந்துத் தொடரின் காலிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் லீக் முறையில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் மற்றும் ரவுண்ட் - 16 சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

ரவுண்ட் - 16 சுற்று முடிவின்படி பிரேசில், ஜேர்மனி, ஆர்ஜன்ரீனா, பிரான்ஸ் நெதர்லாந்து, கொலம்பியா, பெல்ஜியம், ஹோஸ்டரிக்க அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இரு நாட்கள் ஓய்வுக்குப் பின் இன்றைய தினம் காலிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளது. இன்று இலங்கை நேரப்படி இரவு 9.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது காலிறுதிப் போட்டியில் ஜேர்மனி - பிரான்ஸ் அணிகள் மோதவுள்ளன.

இரு அணிகளும் பலம் பொருந்தியவை என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக கிண்ணக் கால்பந்துத் தொடரில் ஆதிக்கம் செலுத்தி வரும் முன்னணி அணிகளில் ஒன்றாக ஜேர்மனி திகழ்கிறது. 3 முறை சம்பியன் பட்டத்தை வென்ற அந்த அணி கடந்த 3 உலக கோப்பையிலும் அரையிறுதிக்கு நுழைந்து இருந்தது. தற்போது 13 ஆவது முறையாக அரையிறுதியில் நுழைவதில் ஆர்வமாகவுள்ளது.

ஜேர்மனி அணிக்கு எல்லா வகையிலும் சவால் விடக்கூடிய வகையில் பிரான்ஸ் அணி உள்ளது. இந்தப் போட்டித் தொடரில் சிறப்பாக விளையாடி வரும் அணிகளில் ஒன்றாக திகழ்கிறது. 1998ஆம் ஆண்டு சம்பியனான அந்த அணி 6ஆவது முறையாக அரையிறுதியில் நுழையும் ஆர்வத்தில் உள்ளது.

இதேவேளை, இலங்கை நேரப்படி நள்ளிரவு 1.30 மணிக்கு இரண்டாவது காலிறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் தென் அமெரிக்கா கண்டத்தில் உள்ள பிரேசில் - கொலம்பியா அணிகள் மோதவுள்ளன.

5 முறை உலகக் கிண்ணத்தை வென்ற பிரேசில் அணி 11ஆவது முறையாக அரையிறுதிக்கு நுழையுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அணிக்கு கொலம்பியா கடும் சவாலாக விளங்கும் என்பதால் பிரேசில் அணி கடுமையாகப் போராட வேண்டும். பிரேசில் அணியின் ஆட்டத்தில் இன்னும் முன்னேற்றம் தேவை. உள்ளூர் இரசிகர்களின் ஆதரவைப் பயன்படுத்தி சிறப்பாக விளையாடாவிட்டால் அந்த அணி வெளியேற்றப்படும். கடந்த 2 உலக கோப்பையிலும் அந்த அணி காலிறுதியில் தோற்றியிருந்தது. 2006ஆம் ஆண்டு பிரான்சிடம் (0-1), 2010ஆம் ஆண்டு நெதர்லாந்திடமும் (1-2) தோற்றது. அதே மாதிரி இந்த உலக கோப்பையிலும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக பிரேசில் இன்று சிறப்பாக ஆட வேண்டிய நெருக்கடியில் உள்ளது.

நடப்புத் தொடரில் கொலம்பியா மிகவும் அபாரமாக ஆடி வருகிறது. இதற்கு ஜேம்ஸ் ரோட்ரிக்கின் ஆட்டமும் காரணம். அவர் 4 ஆட்டத்தில் 5 கோல்கள் அடித்து முதலிடத்தில் உள்ளார். மார்ட்டினஸ் ஜேக்சன் போன்ற சிறந்த வீரர்களும் அந்த அணியில் உள்ளனர். முதல் முறையாக காலிறுதியில் விளையாடும் கொலம்பிய அணி பிரேசிலுக்கு அதிர்ச்சி கொடுத்து அரையிறுதியில் நுழைந்து சாதனை படைக்கும் ஆர்வத்துடன் உள்ளது.

## களத்திற்கு வெளியில்...

வெற்றியுடன் விடைபெற வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் பிரான்ஸ் அணியுடன் தோற்றதால் திருப்திகரமான மனநிலையில் இல்லை. என்றாலும் எனது தேசிய அணிக்காக நான் இதுவரை அளித்த பங்களிப்புக்கள் மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னொரு வீரருக்கு வழி விடுவதற்கு இதுவே சரியான நேரம் என்று கருதி ஒதுங்குகிறேன். நைஜீரியா அணிக்கு பிரகாசமான எதிர்காலம் உள்ளது. அந்த அணியால் விரைவில் சாதிக்க முடியும் என்று நம்புறேன்.

**ஜோசஸ் யோபோ (நைஜீரியா கப்டன்)**

பிரான்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் முதல்பாதியில் நாங்கள் முன்னிலை பெற்றிருக்க வேண்டும். எங்கள் வீரர் இமானுவேல் எமானிக் அடித்த கோலை (19ஆவது நிமிடத்தில்) ஓப்-சைட் என்று கூறி அதை கோல் என்று அறிவிக்க நடுவர் மறுத்து விட்டார். ஆனால் நாங்கள் பந்தை வலைக்குள் செலுத்திய விதத்தை பார்த்தால், அது விதிமுறைக்குட்பட்ட கோல் என்பது தெரியும். அதைத் தொலைக்காட்சி ரீப்ளேயில் காண்பிக்காதது வெட்கக்கேடானது. நடுவரின் செயற்பாடு எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. அவர் நிறையத் தவறுகளைச் செய்தார். அதை ஏன் கோலாக அனுமதிக்கவில்லை என்பதற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன். அது மட்டுமின்றி எங்கள் வீரர் ஒனாஜி இரண்டு முறை எதிரணியின் மோசமான யுக்தியால் பாதிக்கப்பட்டார். நடுவர் அதை கண்டுகொள்ளவே இல்லை. இப்போது காயத்தால் அவதிப்படும் அவர் அனேகமாக ஒரு வாரம் விளையாட முடியாது என்று நினைக்கிறேன். எனது பயிற்சிக் காலத்தில் நடுவரைப் பற்றி பேசுவது இது தான் முதல் முறையாகும். அவர்களின் செயற்பாடு சரியில்லாததால் அது குறித்து விமர்சிக்க வேண்டியதாகி விட்டது. எங்கள் கோல் காப்பாளர் வின்சென்ட் என்யேமா செய்த தவறால், பிரான்ஸ் முதல் கோலை போட்டது. அது தான் பெரும் பின்னடைவாக அமைந்தது. இதுவரை காலமும் நைஜீரியா அணிக்குப் பயிற்சியாளராக இருந்ததை பெருமையாகக் கொள்கின்றேன். இனியும் அதைத் தொடரவிரும்பவில்லை.

**ஸ்ரீபன் கெஷி (நைஜீரிய பயிற்சியாளர்)**

முதல் 90 நிமிடத்திற்குள் (வழக்கமான ஆட்ட நேரம்) நாங்கள் வெற்றி பெற்றிருக்க வேண்டும். அதற்குரிய தகுதியான அணியாக நாங்கள் விளையாடினோம். முதல் பாதியில் கூட இரண்டு முறை கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் கிடைத்து நழுவிப் போயின. பிற்பாதியில் மேலும் ஆதிக்கம் செலுத்தி, கோல் நோக்கி 6 ஷொட்களை அடித்தோம். ஆனால் எதுவும் கைகூடவில்லை.

**அலெக்ஜான்ட்ரோ சபெல்லா (ஆர்ஜன்ரீன பயிற்சியாளர்)**

கோல் அடிக்காத கடைசி நிமிடங்கள் வரை நான் மிகவும் பதற்றத்தில் இருந்தேன். ஒரு சிறிய தவறு இழைத்தாலும் கண்டிப்பாக நாங்கள் தாயகம் திரும்ப வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்திருந்தோம். அது மட்டுமின்றி எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆட்டம் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்ற நிலைக்குச் சென்று விடக்கூடாது என்று விரும்பினோம். அப்படி நடந்து விடக்கூடாது என்ற சிந்தனையே எங்களுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. ஏனெனில் அதனால் நாங்கள் எல்லோரும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். அதிர்ஷ்டவசமாக நாங்கள் கூடுதல் நேரத்திலேயே வெற்றி பெற்று, அடுத்த சுற்றுக்கு முன்னேறி விட்டோம். இந்தக் கோலை பொறுத்தவரை முதலில் நானே அடிக்க முயற்சி செய்யலாமே என்று நினைத்தேன். ஆனால் அந்தச் சமயத்தில் கோல் எல்லைக்குள் டி மரியாவை பார்த்ததும் எனது முடிவை மாற்றி, அவரையும் கோல் முயற்சியில் இணைப்பது என்று முடிவு செய்தேன். அதிர்ஷ்டவசமாக அவர் பந்தை கோல் வலைக்குள் செலுத்தினார்.

**மெஸ்சி (ஆர்ஜன்ரீன கப்டன்)**

உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் காலிறுதிக்கு முன்னேற முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. இப்போட்டியில் பெல்ஜியம் வீரர்களின் கோலடிக்கும் முயற்சியை தடுத்து புதிய சாதனை படைத்தது மகிழ்ச்சி. எதிரணியின் கோல் அடிக்கும் முயற்சியைத் தடுப்பது தான் எனது வேலை என்பதால் என்னால் சாதிக்க முடிந்தது. இப்போட்டியில் பெல்ஜியம் வீரர்களுக்கு அதிக நெருக்கடி கொடுத்த போதும் 1-2 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது வருத்தம். இதன்மூலம் எங்களின் கிண்ணக் கனவு இவ்வளவு விரைவாக முடிவுக்கு வரும் என நினைக்கவில்லை. இப்போட்டியை ஒரு போதும் மறக்க மாட்டேன்.

**டிம் ஹோவர்ட் (அமெரிக்க கோல் காப்பாளர்)**



## சங்கடத்தில் நெய்மர்

"ப்ளேபாய்" யூன் மாத இதழில் மொடல் அழகியின் நிர்வாண படத்தையும், நெய்மரின் பெயரையும் பதிவு செய்ததால் தர்மசங்கட நிலைக்கு நெய்மர் தள்ளப்பட்டுள்ளார்.

ப்ளேபாய் கொஞ்சம் விபரீதமான பத்திரிகை என்பதை நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. இந்நிலையில் ப்ளேபாயின் யூன் மாத பிரேசில் பதிப்பில் ஒரு அட்டைப்படம் இடம்பெற்றிருந்தது.

பேட்ரிசியா ஜோர்டான் எனும் பிரேசிலின் ஹொட்டான மொடல், கோல் காப்பாளரின் கையுறையை (மட்டுமே) அணிந்துகொண்டு சூப்பர் காட்சி கொடுத்திருந்தார். அந்த இதழ் வெறும் படத்தை மட்டும் போடாமல் 'இவர் நெய்மரின் மனங்கவர்ந்த மாது' என்று குறிப்பிட்டிருந்தது. இதனை எதிர்த்து நெய்மர் நீதிமன்றத்தில் உடனே வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி ப்ளேபாய் நிறுவனம் உடனடியாக பிரேசிலில் விற்கக்கூடிய தன்னுடைய யூன் மாத இதழ்களை திரும்பப் பெறவேண்டும். அத்துடன் இந்த இதழ் கடையில் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு நாளும் நாலாயிரத்து ஐநூறு டொலரை அபராதமாக கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் இலக்கிய ஆர்வம் மிக்க மக்கள் அந்த மாத இதழின் அனைத்து பதிப்புக்களையும் வாங்கிவிட்டார்கள். இதனால் நெய்மர் தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டார்.

## தோற்றாலும் பாராட்டு



அமெரிக்கா, பெல்ஜியம் இடையேயான போட்டியைப் பார்க்க அமெரிக்க இரசிகர்கள் அதிக ஆர்வம் காட்டினர். பல நகரங்களிலும் பொது இடத்திலும் பெரிய பெரிய டிஸ்பிளே மூலம் போட்டிகள் ஒளி பரப்பப்பட்டன. இவற்றை கும்பல் கும்பலாக நின்று மக்கள் இரசித்தனர். ஏராளமானோர் அலுவலகத்துக்கு லீவு போட்டுப் போட்டியை பார்க்க வந்தனர். பொலிஸார் கூட ஆங்காங்கே குவிந்து போட்டியை பார்த்தனர். வெள்ளை மாளிகையின் வெளியிலும் பிரமாண்ட தொலைக்காட்சி மூலம் போட்டி ஒளிபரப்பப்பட்டது. அதிபர் ஒபாமாவும் போட்டியை கடைசி வரை இரசித்து பார்த்துள்ளார். அமெரிக்க வீரர்களின் அபார ஆட்டத்தை அவர் வெகுவாக பாராட்டினார்.

## கால்பந்துத் துளிகள்...

- சுவிஸ் அணிக்கு எதிராக ஆர்ஜன்ரீனாவின் டி மரியா கோல் அடிப்பதற்காக 12 முறை முயன்றுள்ளார். இதன் மூலம் ஒரே போட்டியில் அதிக ஷொட்களை அடித்த ஆர்ஜன்ரீனா வீரர் என்ற சாதனையை இவர் படைத்துள்ளார்.

- சுவிஸ் அணிக்கு எதிராக மெஸ்சி 8 கோல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இதன் மூலம் சுவிஸ் அணிக்கு எதிராக அதிக கோல் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்த ஆர்ஜன்ரீனா வீரர் என்ற பெருமையை மெஸ்சி பெற்றுள்ளார்.

- அமெரிக்கா, பெல்ஜியம் இடையேயான போட்டியின் போது, உலகக் கிண்ணக் கால்பந்து போட்டிக்கு எதிர்ப்பு தெரிவித்த பிரேசில் இரசிகர் ஒருவர் திடீரென "மைதானத்துக்குள் புகுந்தார். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. தனது ரீசேரட்டில் "சேரி குழந்தைகளுக்கு உதவுங்கள்" என வாசகத்துடன் வந்த அவரைப் பாதுகாப்பு வீரர்கள் பிடித்து வெளியேற்றினர்.

- தங்கக் காலணி போட்டியில் கொலம்பியாவின் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறார்.. இவர் 5 கோல்களுடன் முதலிடத்தில் உள்ளார். மெஸ்சி (ஆர்ஜன்ரீனா), நெய்மர் (பிரேசில்), தோமஸ் முல்லர் (ஜேர்மனி) ஆகியோர் தலா 4 கோல்களுடன் 2ஆவது இடத்திலுள்ளனர்.

- கமரூன்-குரோஷியா அணிகளுக்கு இடையேயான போட்டியின் போது பிரபல சூதாட்டத் தரகரும், சிங்கப்பூரைச் சேர்ந்த தொழிலதிபருமான வில்சன் ராஜ் பெருமாள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த புகாரை பெருமாள் மறுத்துள்ளார். போட்டி முடிந்த பின்னர் தான் அதைப்பற்றி பேஸ்புக்கில் தகவல்கள் பரிமாறிக் கொண்டதாகவும், தன்னால் கமரூன் அணிக்கு அவப்பெயர் ஏற்பட்டதற்காக அந்நாட்டு கால்பந்து சங்கத்திடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

- அமெரிக்க அணியின் கோல் காப்பாளர் ஹோபர்ட் பெல்ஜியத்தின் 16 கோல் வாய்ப்புக்களை முறியடித்து உலக சாதனை படைத்துள்ளார். உலக கால்பந்து வரலாற்றில் ஒரே போட்டியில் அதிக கோல் வாய்ப்புக்களை முறியடித்த கோல்காப்பாளர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரராகியுள்ளார். அமெரிக்க இரசிகர்கள் இவரை உலக நாயகன் என்று புகழ்ந்து வருகின்றனர்.

- அமெரிக்கா சார்பில் கோல் அடித்த 19ஆவது வயதான கிரீன் களமிறங்கிய முதல் உலகக் கோப்பைப் போட்டி இதுதான். அதிலும், தனக்குக் கிடைத்த முதல் பந்தையே கோலாக்கிய பெருமைக்கும் சொந்தக்காரராகியுள்ளார்.

- அமெரிக்கா-பெல்ஜியம் இடையேயான போட்டியில் இரு அணிகளும் கோல் முயற்சிக்காக மொத்தம் 56 ஷொட்களை அடித்துள்ளன. இதன் மூலம், ஒரே போட்டியில் அதிக ஷொட்கள் அடிபட்டதிலும் புதிய உலகசாதனை படைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன், 1970 இல் மேற்கு ஜேர்மனி-இத்தாலி இடையேயான போட்டியில் 50 ஷொட்கள் அடிக்கப்பட்டதே அதிகம்.

# மெல்பேர்ன் யுத், யாழ். மாவட்ட தெரிவு அணி யாழ். மத்தியில் இன்று பலப்பரீட்சை

## போட்டியை சிறப்பிக்க வருகிறார் சர்வதேச போட்டி மத்தியஸ்தர் மகாநாமா

(யாழ்ப்பாணம்)

அவுஸ்ரேலியா மெல்பேர்ன் கிரிக்கெட் சங்க யுத் அணிக்கும், யாழ். மாவட்ட பாடசாலைகளின் தெரிவு அணிகளுக்குமிடையிலான ருவெனரி-20 கிரிக்கெட் தொடர் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது. இப்போட்டி நிகழ்வில் சர்வதேச கிரிக் கெட் சபையின் போட்டி மத்தியஸ்தர் றொசான் மகாநாமா கலந்துகொள்ளவுள்ளார்.

இப்போட்டியை யாழ். படைத்தலைமையகம் மற்றும் பவுண்டேசன் ஒவ் குட்னஸ் நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இதில் அவுஸ்ரேலிய மெல்பேர்ன் கிரிக்கெட் கழகத்தின் 17 வயதிற்குட்பட்ட அணியும் யாழ். மாவட்ட பாடசாலைகளின் தெரிவு அணியும் மோத வுள்ளன. இதில் யாழ். மாவட்ட தெரிவு அணி யில், யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். அலன்ராஜ், எஸ். கோமிதரன், சென். ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பி.ஜே. பிளமிங், எம். நிலோஜன், ஜே. கிரிசாந்துஜன், எஸ். பிரீன் சன், சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சி. டானி யல், ஏ. ஜெரிக்ஷன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஜே. டிலக்ஷன், பி. அஜித்குமார், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த ரி. சஞ்சஜன், கே. கதி-ரோசன், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். கஜனந்த், எம். துவாரகன், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். விதுஷன் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் சர்வதேச கிரிக்கெட் சபையின் போட்டி மத்தியஸ்தரும், இலங்கை அணி யின் முன்னாள் வீரருமான றொசான் மகாநாமா, யாழ். படைத் தலைமையகத்தின் இரண்டாவது கட்டளை அதிகாரி பிரசாத் சமரசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். மாவட்ட கிரிக்கெட் வீரர்களின் தரத்தை மேலும் வளர்த்துக் கொள்ளும் நோக்குடனேயே இச்சுற்றுப் போட்டியை நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டது. எதிர்காலத்தில் இது போன்ற போட்டி களை தொடர்ந்தும் நடாத்துவதற்குத் தீர்மானித் திருக்கின்றோம். கிட்டத்தட்ட 40 வருடங்களிற்குப் பின்னர் ஒரு வெளிநாட்டு அணி யாழ்ப்பாணம் வந்து போட்டிகளில் பங்குபற்றுகின்றது. இது உண்மையில் மகிழ்ச்சி தரும் விடயம். இந்த மகிழ்ச்சியை நாங்கள் அனைவரும் தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ளவேண்டும் எனப் போட்டி அமைப்பாளர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்றைய தினம் யாழ். மத்தியகல் லூரி மைதானம் விழாக் கோலம் பூண்டிருந்ததை யும், இராணுவ வாகனங்கள், படை அதிகாரிகள், வீரர்கள் மைதானத்தை சூழ்ந்திருந்ததையும் அவ தானிக்க முடிந்தது.

இதேவேளை, யாழ். படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் எல்லே களியாட்ட நிகழ்வு நாளை யும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.,இ)

# விளையாட்டுச் செய்திகள்

## மட்டுவில் ஐங்கரன், மீசாலை சீமா முன்னேற்றம்

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் பி பிரிவுக்கான இரண் டாவது சுற்றுக்கு மட்டுவில் ஐங்கரன், மீசாலை சீமா அணி கள் முன்னேறியுள்ளன. யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இக் கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் மட்டுவில் மோகன-தாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதில், ஏ, பி என இரு பிரிவுகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் பி பிரிவுக்கான போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற முதல் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும் புத்தூர் வளர்மதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மட்டுவில் ஐங்கரன் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. மற்றுமொரு போட்டியில் மீசாலை சீமா, மட்டுவில் கலைவாணி ஸ்ரார் அணிகள் மோதவிருந் தன. இப்போட்டியில் கலைவாணி ஸ்ரார் அணி சமூகமளிக் காமையால் மீசாலை சீமா அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதேவேளை, இன்றைய தினம் இரவு கச்சாய் சிறிமுருகன் எதிர் மட்டுவில் விநாயகர், புத்தூர் கலைமதி எதிர் அச்சுவேலி ஸ்ரார், உடுப்பிட்டி சிவகுமரன் எதிர் மல்லாகம் சிறிமுருகன் அணிகள் மோதவுள்ளன.

# இந்துக் கல்லூரிக்கு ஒன்பது பதக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி ஐந்து தங்கம் உட்பட ஒன்பது பதக்கங்களை வென்றுள்ளது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங் கில் நடைபெற்றது. இதில் யாழ். இந்துக் கல்லூரி வீரர்கள் சிறப்பான முறையில் செயற்பட்டு பதக்கங்களை வென்றுள் ளனர். இதில் 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தலில் சி. கஜலக்ஷன், 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதலில் விதுசன், 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தலில் ஜஸ்மினன், 21 வயதுப் பிரிவு ஆண் களுக்கான உயரம் பாய்தலில் தனுசன், 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் டக்ஷன் ஆகியோர் தங்கப் பதக்கத்தையும், 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் சு. விஜிந்தன், 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் மோகப் பிரசாத் ஆகியோர் வெற்றிப் பதக்கத்தையும், 19 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் டிலக்ஷன் வெண்கலப் பதக்கத்தையும், 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

இதேவேளை, பளு தூக்கல் போட்டியில் வடமாகாணத்தில் அதிக பதக்கங்களை வென்ற கல்லூரி என்ற சிறப்பையும் இந்துக் கல்லூரி நடப்பு ஆண்டில் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(48)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கராத்தேப் போட்டியில் கைதடி நவீல்ட் பாடசாலை வீர,வீராங்கனைகள் ஒன்பது தங்கம் உட்பட பல பதக்கங்களை வென்று அசத்தியுள்ளனர். காட்டா, குமித்தே போட்டிகளில் ஒன்பது தங்கப் பதக்கங்களையும் வென்ற வீர,வீராங்கனைகள் வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன், கராத்தே பிரதம ஆசிரியர்கள் சென்சே விஜயராஜ், சோதி உட்பட பலருடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி.)

## மனோகரா, டையமன்ஸ் முதல் சுற்றில் வெற்றி

ஹென்றீசியன் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு அல்வாய் மனோகரா, வதிரி டையமன்ஸ் அணிகள் முன்னேறி யுள்ளன.வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இளவாலை ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் ஹென்றீசியன் பிறீமி யர் லீக் கால்பந்துப் போட்டித் தொடர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு போட்டிகள் நடைபெற்றன. முதலாவது போட்டியில் ஊர்காவற்றுறை நசரேத் அணியை, எதிர்த்து வதிரி டையமன்ஸ் அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வதிரி டையமன்ஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் அல்வாய் மனோகரா அணியும் பெரிய விளான் சென். அன்ரனீஸ் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அல்வாய் மனோகரா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

(48)

## முன்னணிகள் வெளியேற்றம்

(லண்டன்)

லண்டனின் நடைபெற்று வரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் முன் னணி வீரர்களான நடால், முர்ரே மற் றும் ஷரபோவா ஆகியோர் அதிர்ச் சித் தோல்வியடைந்து வெளியேற்றப் பட்டுள்ளனர்.

இதேவேளை, செரீனா வில்லியம்ஸ், லீநா ஆகியோர் முதலிரு சுற்றுக்களில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. ஆண்கள் பிரிவில் ஜோகோவிச், பெடரர் ஆகியோர் தொடர்ந்தும் தாக்குப்பிடித்து ஆடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி விளையாட்டு மட்டுவில் மத்தியில் இன்று

(மட்டுவில்)

மட்டுவில் மத்தி சோமஸ்கந்தா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது. முன்பள்ளித் தலைவர் சி. இராமச் சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தின ராக யாழ். பல்கலைக்கழக கணக்கியல் துறை விரிவுரையாளர் கலாநிதி பா. நிமலதாசன், சிறப்பு விருந்தினர்களாக மட்டுவில் மத்தி கிராம உத்தியோகஸ்தர் செ.சிவசுப்பிரமணியம், சந்திரபுரம் கிராம உத்தியோகஸ்தர் க. வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிரா மப் பெரியோரைத் தவறாது கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்து மாறு போட்டி அமைப்பாளர்கள் கேட் டுள்ளனர்.

(இ)

# மாவட்ட மட்டப் போட்டிகள் நடாத்தப்படாததால் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுத் திணைக்களத்தின் மாவட்ட மட்டப் போட்டிகள் இன்னமும் நடாத்தப்படாததன் காரண-மாக வீர,வீராங்கனைகள் அதிருப்தியடைந்துள்ளனர். இதே வேளை, மாகாணப் போட்டிகள் நடாத்தப்பட்டிருப்பதுடன் தேசிய மட்டப் போட்டிகளும் அடுத்த மாதம் நடைபெற விருப்பதால் இப்போட்டிகள் நடைபெறுமா என்ற சந்தேகம் தமக்கிருப்பதாகவும் அவர்கள் சந்தேகமடைந்துள்ளனர்.

விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிகள் பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம் என அதன் எல்லைகள் படிப்படியாக விரிந்து செல்கின்றன. இவ்வாறான முறைகளைக் கடைப்பிடித்து போட் டியை நடாத்துவதே வழமையானதும், இலகுவானதும்கூட. அத்துடன் வீர,வீராங்கனைகளின் தரத்தை, இனங்காண் பதற்கும் இலகுவானது.

இவ்வாறானதொரு நிலையில் பிரதேச மட்டப் போட்டி களில் வெற்றியீட்டிய அணிகள் மாவட்டப் போட்டிகளுக்கு முழுவீச்சில் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டு தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் குறிப்பாக, கால்பந்து, கூடைப்பந்து, பெண்கள் மென்பந்து, மேசைப் பந்து, பூப்பந்து மற்றும் தடகளம் போன்ற போட்டிகள் மாவட்ட ரீதியில் இன்னும் நடாத்தப்படவில்லை. ஆனால்,

இப்போட்டிகளின் மாகாணப் போட்டிகள் நிறைவடைந் துள்ளதுடன் தேசிய மட்டப் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன. இதில் மாவட்டப் போட்டிகள் நடாத்தப்படாமையால் தாம் பெரும் விரத்தியில் இருப்ப தாவும், நடப்பாண்டுக்கான இப்போட்டிகள் நடைபெறுமா என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டிருப்பதாகவும் யாழ். மாவட்ட வீர,வீராங்கனைகள், குறிப்பாக, பிரதேச மட்டப் போட்டி களில் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் கவலை கொண்டுள்ளன.

இதேவேளை, இது தொடர்பாக சில விளையாட்டு உத்தி யோகஸ்தர்களைத் தொடர்பு கொண்டவேளை, மாவட்ட ரீதி யில் ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனிப் பயிற்றுநர்கள் உள்ளனர். அவர்களுக்கூடாக பயிற்சி முகாம்கள், வீர,வீராங் கனைகளுக்கான தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டுவதாகவும், இதற்கமையே மாகாண மட்டப் போட்டிக்கான வீரர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம். அதில் தவறு இல்லை. எனி னும் மாவட்டப் போட்டிகளும் நடாத்தப்பட்டிருக்க வேண்டும். அது வீர, வீராங்கனைகளை உற்சாகப்படுத்தியிருக்கும் என தங்களை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத சிலர் உத்தி யோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

(93)

# எதிர்கால வல்லரசுகள்!


இன்று பொருளாதார வளர்ச்சி வேகத்தில் இருக்கும் நாட்டை ப்ரிக் கண்ட்ரி (BRIC Country) என்று அழைக்கிறார்கள். ப்ரிக் நாடா? இதென்ன புதுப் பெயராக, அதிகம் கேள்விப்படாத பெயராக இருக்கிறதே என்று தோன்றுகிறதா? உங்கள் ஆச்சரியம் நியாயமானதுதான்.

நான்கு நாடுகளை பிரிக் நாடுகள் என்கிறார்கள். அவை பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா. இந்த நான்கு நாட்டுப் பெயர்களின் (Brazil, Russia, India, China) முதல் எழுத்துகள் மட்டும் எடுத்துச் சேர்த்து (BRIC) நாடுகள் என்று அழைக்கிறார்கள்.

நான்கு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான அம்சம் அவற்றின் பொருளாதார வளர்ச்சி வேகம் தான். அதனால் இவற்றை Big four என்றும் குறிப்பிடுகிறார்கள். வெகு காலத்திற்கு பொருளாதார வளர்ச்சி அடையாத under developed நாடுகளின் பிரிவில் இந்த நாடுகள் இப்போது வேகமான வளர்ச்சி அடைந்து வரும் ப்ரிக் தேசமாக உலக முதலீட்டாளர்களால் பார்க்கப்படுகிறது.

வெகு காலத்திற்கு வளர்ந்த நாடுகள், வளராத நாடுகள் என்றே பிரித்துப் பார்க்கப்பட்ட உலக நாடுகள் பின்பு முதல் உலக நாடுகள், இரண்டாம் உலக நாடுகள் மற்றும் மூன்றாம் உலக நாடுகள் என்று பிரித்துப் பேசப்பட்டன. எல்லாமே பொருளாதார அடிப்படையில் பிரிக்கப்பட்டவையே.

பின்னர் 1975 இல் அதிக வளர்ச்சி கண்ட நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் (இன்டஸ்ட்ரியலைஸ்ட்




நேஷன்ஸ்) G-6 என்கிற அமைப்பினை உருவாக்கிக் கொண்டன. ஓராண்டிற்குப் பிறகு கனடாவும் அவற்றுடன் இணைத்துக் கொள்ளப்பட அது G-7 ஆனது. இவற்றின் நிதியமைச்சர்கள் அடிக்கடி கூடி வியாபாரம் மற்றும் வளர்ச்சி நலன்கள் குறித்துப் பேசுவார்கள். இந்த அமைப்பில் ஏழை நாடுகளுக்கு இடமில்லை!

G-7 நாடுகள் பொருளாதார பலம் பொருந்தியவையாக உலகின் வலிமையான நாடுகளாகப் பல ஆண்டுகள் இருந்தன. ஆனால், இப்போதைய கதை வேறு. 2008 இற்குப் பிறகு இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்றவை அந்தந்த அரசுகளின் அளவுக்கு மீறிய கடன்களால் பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக்கொண்டு விட்டன! கடந்த சில ஆண்டுகளாக ஜப்பான் வளர்ச்சியிலும் தளர்ச்சி, தேக்கம். அமெரிக்காவுக்கும் அந்த நிலை வந்துவிட்டது. மொத்தத்தில் G-7 நாடுகளில் பலவும் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன!

**('ஷேர் மார்க்கெட் சீக்ரெட்ஸ்' நூலில் சோம.வள்ளியப்பன்)**

---

சமுதாயஅரங்கச் செயற்பாடுகளில் பாரம்பரியக் கலைகளுக்கு பெரும் பங்குண்டு. இன்றைய சூழலில் பரவலாக எல்லா இடங்களிலும் பாரம்பரியக் கலைகளின் இன்றியமையாமை உணரப்பட்டும் உணர்த்தப்பட்டும் வருகின்ற நிலையில், "பாரம்பரியக் கலைகள் அருகிச்செல்கின்றன, இன்றைய சூழலுக்கு ஒத்துவராது" என்பதான சொல்லாடல்களும் உலா-வரவே செய்கின்றன.

எல்லாவற்றினையும் தாண்டி பாரம்பரியக் கலைகள் உரிய வீரியத்துடன் தொடர் செயற்பாடுகளாக இயங்கிக் கொண்டு வருகின்றமை பலரது உரையாடல்களில் இருந்தும், பலருடனான சந்திப்புக்களில் இருந்தும், தொடர்ச்சியாக இடம்பெறும் அவதானங்களில் இருந்தும் தெரியவருகின்றது.

வருடாவருடம் மட்டக்களப்பின் பல பிரதேசங்களிலுமுள்ள கோவில்கள், சடங்குகள், விழாக்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் போன்றவைகளில் ஒருபகுதியாக பாரம்பரியக் கலைகளின் அரங்கேற்ற நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருப்பது கண்முன் உள்ள உண்மையாகும். இவ்வருடமும் மட்டக்களப்பின் பல கிராமங்களிலும் இடம்பெற்ற கூத்துநிகழ்வுகள் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

2014.06.01 அன்று மட்டக்களப்பின் முனைக்காட்டு கிராமத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்ட பவளக்கொடி வடமோடிக்கூத்து நிகழ்வும் சிறந்த உதாரணமாகின்றது. முனைக்காடு நாகசக்தி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மிகவும் பிரமாண்டமான முறையில் பெருவிழாவாக ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது.

உண்மையில் நான் 1996, 1997 காலப்பகுதியில் கதிரவெளிக் கிராமத்தில் வசித்திருந்த வேளையில் வாளவீமன், கர்ணன் போர், 18ஆம் போர், இராமநாடகம், கீசகன் வதை... போன்ற இன்னும் பல கூத்துக்களை கண்டுகளித்துள்ளேன். அம்மா, அக்கா, சித்தி போன்றோர்... பன்பாய் தலையணை மற்றும் க்ச்சான், சோளன், தேங்காய்ச்சொட்டு போன்ற தீன்பண்டங்களுடன் போய்வந்த ஞாபகங்கள் எல்லாம் மனதை தொட்ட வண்ணம் இருந்தன.

பாட்டன், பாட்டி, அம்மா அப்பா, கணவன் மனைவி, அண்ணன் தம்பி, அக்கா தங்கை, பிள்ளை, குட்டி என பலதரப்பட்டவர்களையும் ஒன்றிணைப்பதற்கு வரவழைக்கும் களமாக அப்பாரம்பரிய அரங்கேற்ற நிகழ்வு காணப்பட்டது. அவ்வரங்கேற்ற வெளியில் காணப்பட்ட சுதந்திரமான வட்டக்களரி, வெளி, ஆற்றுகைச்சூழல் போன்ற பலவற்றை குறிப்பிட்டுக் கூற முடிகின்றது.

ஆனால் இவ்வாறான சமூக ஒன்றிணைவினை வேறு இடங்களில் ஒன்றிணைப்பதென்பது சாத்தியமற்றது என்பது உணரப்பட்டு கடிதம். சுவரெட்டி, ஒலிபெருக்கி மூலம் அறிவித்தும் கூட செய்யமுடியாத ஒன்றினை கூத்தரங்கேற்றம், சதங்கையணி போன்ற நிகழ்வுகளால் செய்யமுடிகின்றது.

---

# பெண்வெறுப்பு என்றொரு நீண்ட படலம்

– அம்பை

பெண் எழுத்து குறித்தும், பொதுவாகப் பெண்களைக் குறித்தும் இருக்கும் நோலாமை தமிழ் இலக்கிய விமர்சன மரபிலும் தமிழ் இலக்கிய உலகிலும் ஒரு தொடர் கண்ணியாக இருந்துவருகிறது. கல்வியை, உரிமைகளை, வெளிப்பாட்டுக்கான நியாயமான இடத்தைக் கோரும் பெண்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் குறையுள்ளவர்கள், அந்தக் குறைபாடுதான் அவர்களை எல்லா வகையிலும் செயற்படத் தூண்டுகிறது என்ற எண்ணம் பல காலமாக இருந்துவருவதுதான்.

இந்தக் குறைகள்தான் என்ன? அழகின்மை, தோற்றப் பொலிவின்மை, ஓர் ஆணின் துணையின்மை, பெண்களுக்கு இருக்கக்கூடாத அதீத காம இச்சைகள். இவைதான் பெண்களை இயக்கும் அடிப்படையான குறைகள்/காரணங்கள் என்ற கருத்து தொடர்ந்து நிலவிவருகிறது. அத்தனையும் பெண் உடல் மேல் கட்டப்பட்டவை. பெண் மட்டும் ஆண்கள் உவகையுறும் "பெண் தன்மை" கொண்டவளாக இருந்திருந்தால் சரித்திரத்திலும் இலக்கியத்திலும் அவள் பங்கு வேறு வகைப்பட்டிருக்கும் என்ற கணிப்பு. இந்த இலக்கிய நோக்கர்களைப் பொறுத்தவரை பெண்ணின் எழுத்தும் செயற்பாடும் ஒரு மனநோயின் கூறுகள்.



இலக்கிய உலகில் பெண்ணுக்கு அளிக்கப்படும் இடம் எந்த வகையிலும் ஆணின் இடத்தைக் குலைக்கக் கூடாது, அது இரண்டாம் நிலையிலேயே இருக்க வேண்டும் என்ற எண்ணமும் தொடர்ந்து இருக்கும் ஒன்றுதான். ராஜம் கிருஷ்ணனின் மலர்கள் நாவலுக்கும், ஜெகசிற்பியனின் திருச்சிற்றம்பலம் நாவலுக்கும் முதல் பரிசு ஆனந்த விகடனில் பகிர்ந்து அளிக்கப்பட்டபோது, அவை தொடர்களாக ஆனந்த விகடனில் வெளிவரத் தொடங்கின.

தாயற்று, தான் வளரும் உறவுக்காரர்களின் குடும்பத்தில் சிறுமைப்படுத்தப்படுவதால் வாடும் ஒரு பெண்ணைப் பற்றிய கதையாகப் பல பக்கங்கள் கொண்ட நாவல் மலர்கள். திருச்சிற்றம்பலம் நாவலைவிட மிகப் பெரியது. மலர்கள் நாவலில் பாதிகூட முடிந்திராதபோது ராஜம் கிருஷ்ணனுக்குக் கடிதம் போயிற்று, ஜெகசிற்பியனின் நாவல் தொடர் இன்னும் ஓர் அத்தியாயத்துடன் முடிவதால் மலர்கள் நாவலையும் அடுத்த ஓர் அத்தியாயத்துடன் முடிக்கும்படி.

ஒரே பரிசு பெற்ற ஓர் ஆண் எழுத்தாளரின் நாவல் முடியும் போது பெண் எழுத்தாளரின் நாவல் தொடர்ந்து வருவது அவரை அவமானப் படுத்துவதாகும் என்ற நோக்கில் எழுதப்பட்ட கடிதம். சென்னைக்கு வெளியே இருந்த ராஜம் கிருஷ்ணன் விரைந்து வந்து நாவலைத் தேர்ந்தெடுத்தவர்களில் ஒருவரான, கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜகந்நாதனை அணுகி, தனக்கு நியாயம் கிடைக்கும்படி செய்யக் கோரினார். கி.வா.ஜ. எடுத்துக் கூறிய பின்தான் மலர்கள் தொடர்ந்து தொடராக வந்தன.

எழுத்தை அதன் இலக்கியத் தன்மை கொண்டு அளந்த நல்ல கணங்களும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருந்திருக்கின்றன. கௌரி அம்மாள் எழுதிய கடிவாளம் நாவலுக்கு வ.ரா. முன்னுரை எழுதினார். மங்கை என்ற பத்திரிகையைத் தொடர்ந்து நடாத்த குகப்ரியைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. குமுதினி, சாவித்திரி அம்மாள், சரஸ்வதி அம்மாள், ராஜம் கிருஷ்ணன், குகப்ரியை, அநுத்தமா, ஆர். சூடாமணி போன்ற எழுத்தாளர்களின் நாவல்களையும் கதைகளையும் மட்டுமல்ல, அவர்கள் ஆங்கிலத்திலிருந்து செய்த பல மொழிபெயர்ப்புகளையும் வெளியிட கலைமகள் போன்ற பத்திரிகைகள் முன் வந்தன.

இலக்கிய விமர்சனம் என்பது ஒருவரின் ஜனநாயக உரிமை என்பதில் யாருக்கும் மறுப்பேதும் இல்லை. பெண்-ஆண் என்ற இரு பாலாரின் எழுத்துக்களும் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இல்லை ஆனால் அவை பெண்ணின் தோற்றத்தையும் "அளவுக்கு மீறிய" என்று சிலர் கணிக்கும் இச்சைகளையும், அவள் உடல் மற்றும் வாழ்வு குறித்த கற்பிதங்களையும் ஆதாரமாகக் கொண்ட இலக்கிய அபத்தங்களாக இருக்கக் கூடாது.

குன்றுபதேசம் செய்வது தமிழ் இலக்கிய மற்றும் பதிப்பு உலகில் காலம்காலமாக இருக்கும் வியாதி. அதற்கு இலக்காகப் பெண்கள் இருந்துகொண்டே இருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் பேனாவை எடுத்து எழுதியோ, மேடையில் பேசியோ, வலைத் தளத்தில் எழுதியோ பெண்கள் உய்வுறப் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எத்தனை கருணை உள்ளம் இவர்களுக்கு!

பெண்கள் என்றால் உருகும் குணம். இத்தகையவர்களுக்குச் சொல்லக்கூடியது ஒன்றே ஒன்றுதான். பெண்கள் தங்கள் வெளிப்பாட்டுக்கான வழிகளையும். தரங்களையும் நிர்ணயிக்க வல்லவர்கள். ஆசான்களைத் தேர்ந்தெடுக்கவும் ஒதுக்கவும் தெரிந்தவர்கள். பெண்களுக்காக இத்தனை சொல்பவர்கள், அவரவர் சொந்த வெளிப்பாடு உய்யும் வழியைப் பார்த்துக் கொண்டால் இலக்கியச் சரித்திரத்தில் இருக்கும் மௌனங்களையும் ஒதுக்கல்களையும் களைய முடியும். அப்படிக் களைய வேண்டியதுதான் இப்போதைய தேவையும்கூட

---

# முகவெட்டு

ஜெமினி கணேசன், புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது அவ்வப்போது மன்னரின் கிரிக்கெட் டீமில் விளையாடுவார். புதுக்கோட்டை மன்னர் ஸ்ரீ பிரகதாம் கோபால தொண்டைமானுக்கு கிரிக்கெட் கற்றுக் கொடுக்க ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார், அவர் பெயர் Capt. G.T.B குழுவில் கிரிக்கெட் ஆடுபவர்களுக்கு அவ்வப்பொழுது புது மன்னர் பரிசளிப்பார். அப்படி பரிசு வாங்கிப் படித்தவர்தான் என்ற ஜெமினி கணேசன். ஆசிரியராக, வானொலி அறிவிப் வரி அதிகாரியாக எல்லாம் சிலகாலம் பணியாற்றியவர் ஜெ

ஜெமினி ஸ்டுடியோவில் நடிக்க வாய்ப்புக் கேட்டு வந்து பெண். அப்பொழுது அங்கே நடிகர்களைத் தேர்ந்தெடுக்கும் இருந்த ஜெமினி கணேசன் வந்தவரை ஏற இறங்கப் பார்த் முகவெட்டு இல்லை. நிறமும் சுமார்தான்... ஆக சான்ஸ் கி திருப்பி அனுப்பிவிட்டார். பிறகு அந்தப் பெண் நடிகையாகி கணேசனின் மூன்றாவது மனைவியானார். அவர்தான் நடிகை சாவித்திரி.

**('அற்புத நிகழ்ச்**

# சமுதாயஅரங்கச் செயற்பாடாக முனைக்காட்டில் பவளக்கொடி வடமோடிக் கூத்து நிகழ்வு

— சரவணமுத்து தரேஸ்வரன்

...றால் இதனைய்யா, நம்மவர்கள் ...வாறெல்லாமோ தூற்றிவைத் ...ருக்கின்றார்கள்!

கூத்து அரங்கேற்றத்தினை ...த்திரம் பார்த்து ரசிப்பதைத் தாண்டி பழைய நினைவுகள், எண்ணங்கள், செயற்பாடுகள் மற்றும் கதைத்தல், கேட்டல், உறவுகளைச் சந்தித்தல், உணர்வுகளை பகிர்ந்துகொள்ளல் எனச் சமூகக் குழுமத்தின் வரவேற்புத்தரும் களமாக பவளக்கொடி அரங்கேற்றச்சூழல் அமையப் பெற்றிருந்தது.

கூத்தரங்கேற்றத்திற்கு சற்று போட்டுக்கொண்டு விளையாடுகின்றவர்களாகவும் காணப்பட்டனர். இது சிறுவர் அரங்கக் கற்றல் கூடமாகவும் விளையாட்டு இடமாகவும் அக்கூத்தரங்கு செயற்பட்டதை உணர்த்தியது.

சிறுவர்கள்







சேலைகளின் வர்ணங்கள் காட்சியின் முகப்பொன்றில் கட்டப்பட்டிருந்த மற்றும் தோரணத்தின் அலங்கரிப்பு முறைமை, ஆக்கமுறைமை என்பன தமிழர்களின் பாரம்பரியக் கட்டடக் கலையின் தனித்துவமிக்க அம்சமாக களரியினை கருத வாய்ப்பளித்திருந்தது.

சுமார் 34 வருடங்களுக்கு பின்னர் இக்கூத்தினை மீண்டும் இப்பொழுது

செய்வதில் சவால்கள் எதிர்கொள்பவர்களாக இருந்தனர்.

குறிப்பாக அல்லியாக ஆடியவருக்கு இன்னொருவர் பாடலை சொல்லிக்கொடுக்க உடன் மனனம் செய்கின்ற திறமை கொண்டவராகக் காணப்பட்ட அதேவேளை படித்தவர்கள் பலர் எழுதப்பட்ட துண்டுகளை திருப்பி திருப்பிப் பார்த்துப் படிக்கின்ற, மனனம் செய்கின்ற போக்கினையும் காணமுடிந்தது.

முனைக்காட்டுச் சமூகமே ஒன்றிணைந்து இக்கூத்து நிகழ்வை நடாத்தியமை கவனிக்கப்பட வேண்டியதுதாகும். இச்சமூக இணைப்பாக்கத்தினூடாகவே இது சாத்தியமாகின்றது

முன்னர் நாலாபுறத்திலிருந்தும் மக்கள்கூட்டம் குவிந்தமை அந்நிகழ்வின் சிறப்பினையும், குறித்த பிரதேச மக்களின் ஈடுபாட்டினையும் விருப்பினையும் உணர்த்தியது.

பலதரப்பட்டவர்களின் பங்களிப்பும் வருகையும், வயது, பால்வேறுபாடுகளின்றி சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அதாவது அறுபதுகளை எட்டிய பாட்டன், பாட்டிமார்கள் இரண்டு, மூன்று வயதுடைய பிள்ளைகள், சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் எனப் பலதரப்பட்டவர்களும் பங்குகொள்ள, ஒன்றிணைக்க சந்தர்ப்பம் கொடுத்திருந்தது இவ்வரங்கேற்றம்.

குடும்பசகிதம் அனைவரும் பங்குகொண்டு உண்டு மகிழ்ந்ததும் முக்கியமானது. சிறுவர்கள் பலரும் கச்சான் விற்கின்றவர்களாகவும் ஆடிஓடி விளையாடுகின்றவர்களாகவும் களரிக்குப் பக்கத்திலிருந்து கூத்துக்களைப் பார்த்து, கூத்தாடுபவர்களுக்கு காசிமாலை, பூமாலை, கச்சான்மாலை மற்றும் ஏனைய மாலைகள் அணிகின்றவர்களாகவும், நித்திரை கொள்கின்றவர்களாகவும் சத்தங்கள்

விளையாடவோ, கூடிச் செயற்பட்டு மகிழவோ உரிய வாய்ப்புக்கள் நமது சூழலில் குறிப்பாக கற்றல் செயற்பாடுகளில் எந்தளவிற்கு வழங்கப்படுகின்றது? பாரம்பரியக் கூத்தரங்கு அத்தகைய வாய்ப்பை எவ்வாறு எளிமையாக ஆனால் வளமாக வழங்குகிறது என்பது கவனிப்பிற்குரியது.

பவளக்கொடி கூத்தரங்கேற்றத்தின் களரியினுடைய அமைப்பும், அலங்கார முறைமையும், தோரண வடிவமைப்பும் பங்கெடுத்த பலருக்கும் மெச்சத்தக்க வகையில் அமையப்பெற்றிருந்தது. களரியின் விசாலமும், நேர்த்தியான முறையில் களரியின் குடையினை ஆக்கப் பயன்படுத்திய சேலைகளைத் தாங்குவதற்காக உள்ளே வலைபோன்ற அமைப்பினால் துணி பின்னப்பட்டு வடிவமைக்கப்பட்ட முறைமையும் வெளிக்கும், களரி அமைப்பிற்கும் வண்ணமயத் தன்மையை கொடுத்திருந்ததோடு பலர் உள்ளங்களையும் கவர்ந்திருந்தது.

தான் (2014) ஆடியதாகவும், முன்பு ஆடியவர்களில் தற்போது 04 பேர் மாத்திரமே உயிருடன் இருக்கின்றனர் எனவும் அவர்கள் இந்த அரங்கேற்றத்திற்கு ஆலோசனை வழங்கிய தாகவும் குறிப்பிட்டனர்.

மேலும் தற்போது இக்கூத்தினை ஆடுபவர்கள் சிறுவர்கள், மாணவர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், பழைய கூத்துக்கலைஞர்கள், இளம் கூத்துக் கலைஞர்கள் என பல்வேறு தரப்பினராக இருக்கின்றனர். இது பாரம்பரிய கூத்தரங்கின் முக்கியத்துவத்தினை சமூகத்தின் அனைத்து தரப்பினரும் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

கூத்தில் அல்லியாக ஆற்றுகை செய்த மூத்த கூத்துக்கலைஞருக்கு எழுதவோ, வாசிக்கவோ தெரியாது ஆனால் சிறந்த கூத்துக் கலைஞர். அதேவேளை பாடசாலை, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளில் படித்தவர்களாக இருக்கும் கூத்தர்கள் பலர் கூத்துப்பாடல்களை மனனம்

என்பதும் அதுவே இத்தகைய அரங்க முன்னெடுப்புக்களின் தனித்துவம் என்பதும் உண்மை.

இரவு 8.15 மணியளவில் ஆரம்பித்த பவளக்கொடி கூத்தாற்றுகை அதிகாலை 4.30 மணிவரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. கூத்துப்பாடல்கள் பார்ப்போரை நித்திரையில் ஆழ்த்தும் அதே வேளை கூத்தாடல்க்ள் நித்திரையை விழிக்கவும் வைத்தன.

பல்வேறு சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் பல மனிதர்களும் சந்திக்கக்கூடிய வாய்ப்புக்களும், நிகழ்த்தக்கூடிய இடமும், சூழலும் சமகாலத்தில் குறைவாகக் காணப்படுகின்ற நிலையில் மனிதர்களை இணைத்து மகிழ்ச்சிகரமாகவும் ஆரோக்கியமாகவும், சந்தோசமாகவும் வாழவைப்பதற்கான சுதந்திரத்தினையும் சூழலையும் இப்பாரம்பரியக் கலைச்செயற்பாடுகள் கொடுத்துவருகின்றது என்பதே பவளக்கொடி கூத்துநிகழ்வை முன்னிறுத்தி உறுதியாகக் கூறிக்கொள்ளமுடிகின்றது.


# தலையணைச் சண்டை!

ஐரோப்பிய நாடுகளில், ஒவ்வொரு ஆண்டும், சர்வதேச தலையணைச் சண்டை தினம், கொண்டாடப்படுகிறது. குறிப்பிட்ட நாளில், முக்கிய நகரங்களின் மையப் பகுதியில், ஏராளமானோர் தலையணைகளுடன் திரண்டு வந்து, ஒருவரை ஒருவர், தாக்குவர். தலையணை பிய்ந்து, அதில் உள்ள பஞ்சு வெளியே வரும் வரை, சண்டையிடுவர். சமீபத்தில், லண்டன், பாரீஸ், மாட்ரிட், ரோம் ஆகிய நகரங்களில், இந்த வித்தியாசமான திருவிழா நடந்தது. வேலைப் பளு, குடும்ப பிரச்சினை போன்றவை காரணமாக ஏற்படும் மன அழுத்தத்தை போக்குவதற்காக, இந்தச் சண்டை திருவிழாவை நடாத்துகின்றனர்.



# ...வட்டு சரியில்லை!

...ர் பிரகதாம்பாள் தாஸ் ராஜ ... கொடுக்க ஆங்கிலேயர் ...pt. G.T.B ஹார்வி. மன்னர் ...பொழுது புது உடுப்புக்களை ...த்தவர்தான் ஆர்.கணேஷ் ...ி அறிவிப்பாளராக, வருமான ...யவர் ஜெமினி கணேசன். ...ட்டு வந்து நின்றார் ஒரு ...தெடுக்கும் உதவியாளராக ...கப் பார்த்து, "உனக்கு ...சான்ஸ் கிடைக்காது", என்று ...டிகையாகி, அதே ஜெமினி ...ான் நடிகையர் திலகம்



(...்புத நிகழ்ச்சிகள்' நூலிலிருந்து.)

# வங்கிக் கணக்குடன் பிறக்கும் குழந்தைகள்!



உங்களுக்குக் குழந்தை பிறந்திருக்கிறதா? நல்ல செய்திதான். எல்லோருக்கும் இனிப்பு கொடுத்துக் கொண்டாடுவீர்கள். அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். இந்தாருங்கள்.. இதைப் பிடியுங்கள்.

என்ன இது படிவம் என்று அதிர்ச்சி தாங்காமல் கேட்கிறீர்கள். இது உங்கள் மகன் அல்லது மகள் பெயரில் வங்கிக் கணக்குத் தொடங்குவதற்கான படிவம். என்னய்யா அக்கிரமம் இது? பிறந்த குழந்தையை இன்னும் தொட்டிலில் கூடப் போடவில்லை. அதற்குள் கணக்குத் தொடங்குவதா என்று கேட்பீர்கள்.

நீங்கள் கெட்டிக்கார அப்பா அல்லது அம்மாவாக இருந்தால் இப்படி கேள்வி கேட்டுக்கொண்டு நிற்க மாட்டீர்கள். கொடுங்கள் படிவத்தை என்று வாங்கி நிரப்ப ஆரம்பித்து விடுவீர்கள். இன்னும் கொஞ்சம் கெட்டிக்காரர்கள் என்றால் நேற்றே படிவத்தை வாங்கி வைத்து விட்டோமே என்று எடுத்துக் காட்டுவீர்கள்?

ஆமாம். இப்படியெல்லாம் வசதிகள் வந்துவிட்டன. பிறந்து ஒருநாள் வயதுடைய பிள்ளையின் பெயரி லேயே கணக்குத் துவக்கலாம். 18 வயதுக்குக் கீழ் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கணக்குத் தொடங்கிவிட வேண்டும் என்று வங்கிகளில் வரிந்து கட்டிக்கொண்டு இறங்கி இருக்கிறார்கள்!

இப்போதுதான் பிறந்த குழந்தைக்குக் கணக்கு வைக்க வேண்டிய தேவை என்ன? குழந்தை தானே கணக்கு விவரங்களைப் புரிந்து கொள்ளப் போகிறதா? பணத்தைப் போட்டு எடுக்கத் தெரிந்திருக்குமா? ஏன் இந்த அவசரம்?

கேட்கத் தோன்றும். நல்ல கேள்விதான். சிலருக்கு எத்தனையோ வயது ஆகியிருந்தாலும் வங்கிக் கணக்கே இல்லாமல் இருக்கிறார்களே, அதற்கு என்ன சொல்வீர்கள்? ஒருநாள் முதல் 18 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்குக் கணக்குத் தொடங்குவதில் எத்தனையோ நன்மைகள் இருக்கின்றன. சேமிக்கிற பழக்கத்தைக் குழந்தைகளுக்குக் கற்றுத் தருவதற்கு இது நல்ல வழி. அவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்குத் தூண்டுகோலாய் அமையக் கூடியது. பல்வேறு சூழ்நிலைகளில் இது கை கொடுத்து உதவக் கூடியது.

குழந்தைகளுக்கான திட்டங்களில் பல சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. பல பாடசாலைகளில் அவர்களே குழந்தைகளிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் சேமிப்புத் தொகையை வசூலித்துக் கொண்டுபோய்க் கட்டுகிறவர்களும் இருக்கிறார்கள்!

உங்கள் பிள்ளைகள் உண்மையிலேயே உங்களுக்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் இப்போதே அவர்கள் பெயரில் குழந்தைகள் சேமிப்புக் கணக்கைத் தொடங்குங்கள். உங்கள் அப்பா, அம்மா செய்யத் தவறியதை நீங்கள் செய்யலாம்.

('வங்கிகளைப் பயன்படுத்தி வசதியாக வாழுங்கள்' நூலில் ம.லெனின்)



முத்தமிழ் விழாவில் மட்டுவில் பாடசாலை மாணவர்கள்


வருங்கால கிராமத்து தலைவர்கள்

# தென்மராட்சி மண்ணில் மாண்பு மிகு பக்திநெறி கொண்ட மட்டுவில் கிராமம்.

'வில்' என முடியும் பெயர் கொண்ட கிராமங்கள் பல யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. கொக்குவில், கோண்டாவில், நுணாவில், கெருடாவில், இணுவில், உடுவில், மந்துவில் போன்றன அவற்றுள் சிலவாகும். 'வில்' என்ற சொல்லுக்கு 'குளம்' என்ற பொருளில் நீர் நிலைகளைக் கருதப் பயன்பட்டுள்ளது. இந்த வகையில் 'மட்டுவில்' என்பதை எடுத்து நோக்கினால் 'மட்டு' என்பது தேன் என்ற பொருளில் வழங்கக் காணலாம். இப்பிரதேசத்தில் தாமரை நிறைந்த பல தடாகங்கள் அல்லது பொய்கைகள் காணப்பட்டன. இவ்வாறு தேனும் பொய்கையும் சேர்த்துத் தேன் பொய்கை எனும் பொருள்பட 'மட்டுவில்' என அழைக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் பெருங்குளம், நெனியன்குளம், சிலிவில் குளம், அம்பலந்துறைக்குளம், நுணாவில் குளம், மருதங்குளம் போன்ற இடப்பெயர்களை இன்றும் காணமுடிகின்றது. அத்தோடு மட்டு என்றால் தேன் இக்கிராமம் முன்பு காடாக இருந்ததால் இங்கு தேன்மிகுதியாகச் சேகரிக்கப்பட்டதென்றும் கூறுவர். இன்றும் இப்பிரதேசத்தில் தேன் சேகரிப்பாளர்கள் அங்கொருவர் இங்கொருவர் இருக்கக் காண்கின்றோம்.

மட்டுவில் கிராமம் 'சந்திரபுரம்' என முன்னர் வழங்கியிருக்க வேண்டும் என்பதை மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை பாடிய ஈழமண்டலச் சதக்கம் மூலம் அறியக்கிடக்கின்றது. அந்நியராட்சிக் காலத்திலேயே இப்பெயர் 'மட்டுவில்' ஆக மாறியிருக்க வேண்டும். சோழர் காலத்தில் இவ்விடம் 'மட்டிவால்' என்ற பெயரால் அழைக்கப்பட்டமை மூன்றாம் இராஜராசசோழனின் திருவாலங்காட்டுக் கல்வெட்டு ஒன்றினால் அறிய முடிகின்றது. அப்பிரதேசம் சுமார் 5875 ஏக்கர் பரப்பளவைக் கொண்டு காணப்படுகின்றது.


இப்பிரதேசத்தில் பல்வேறு தொழில்களைப் புரியும் தொழிலாளர்கள் உள்ளனர்., பொதுவாக விவசாயமே இக்கிராமத்தவர்களின் முதுகெலும்பாகும். கைத்தொழில் என்ற நிலையில் குடிசைத் தொழில்கள் பல உள்ளன.

### இப்பிரதேச பாடசாலைகள்

1. சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
2. சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்
3. அமெரிக்கமிஷன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
4. சாந்த நாயகி வித்தியாசாலை
5. மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
6. மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்
7. சந்திர மௌலீச வித்தியாலயம்
8. கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
9. நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை






# பன்றித்தலைச்சி" அம்மன் ஆலய வரலாற்றுச் சுருக்கம்

இவ் ஆலயத்திற்கு 'பன்றித்தலைச்சி' எனும் பெயர் ஏற்பட காரணவரலாற்றுச் சம்பவமொன்று உள்ளது. இவ் ஆலயத்தில் பறையடிக்கும் பக்தன் ஒருவன் தனது குலத்தொழிலான புலைத் தொழிலையும் செய்து வந்தான். அன்றொருநாள் அவனெறிந்த கூரிய ஆயுதம் இலககுத் தவறியோ அல்லது திருவருட் செயலாகவோ பசு ஒன்றின் மீது பட்டது. உடனே அப்பசு துடி துடித்து இறந்தது. அம்மன் மீது அளவற்ற பக்தி கொண்ட அந்தப் பக்தன் வருந்தி, பின்னர் தெய்வத்தின் துணை இருக்கிறதே என்ற துணிவோடு அந் தப் பசுவை ஆலயத்திற்கு தென்கிழக்கு பகுதியில் புதைத்து விட்டான். நடந்த சம்பவத்தை எப்படியோ தெரிந்து கொண்ட மாட்டுச் சொந்தக்காரன் பக்தன் மீது நடவடிக்கை எடுத்தான். பசுக் கொலை புரிந்த பாதகத்திற்காக தன் மீது சுமததப்பட்ட குற்றச் சாட்டுக்குப் பயந்த பக்தன் தனக்கு அபயம் அளிக்கும்படி அன்னையிடம் வேண்டினான். அன்றிரவு அடியவனின் கனவில் முதிய விதவைக் கோலத்தில் காட்சி கொடுத்த அம்மை நாளைய தினம் பன்றி எச்சங்களை புதைத்தேன் என்று கூறு என்று அருள்புரிந்தாள். என்ன அதிசயம் அடுத்த நாள் மாட்டுத்தலை புதைக்கப்பட்ட இடத்தில் பன்றித்தலை காணப்பட்டது. அதைக் கண்ட பக்தன் ஆடிப் பாடி கைகூப்பி, மெய்சிலிர்க்க, கண்ணீர மல்க, வாய் குழறியபடி பன்றித் தலைச்சி என்று பக்தியோடு பல முறை பணிந்தான். தனது பக்தனுக்கு கிழக் கோலத்தில கனவில் காட்சி கொடுத்த காரணத்தாற் போலும் அன்னையைப் பற்றிப் பேசும் போது 'கிழவி' எனக் குறிப்பிட்டுப் பேசுவோர் மட்டுவிலில் இன்றும் வாழ்கிறார்கள்.

அன்றிலிருந்து அம்பாள் பன்றித்தலைச்சி அம்மன் என்று பக்தர்களால் வணங்கப்பட்டு வருகின்றாள். ஆரம்ப காலங்களில் அன்னையின் ஆலயத்தில் நிர்வாகிகளே



பு,ஜைகளை மேற்கொண்டு வந்தனர். 1900ஆம் ஆண்டிலிருந்து பிராமணக்குருமார் பு,ஜைகளை ஆற்றுகின்றனர். 1939 ஆம் ஆண்டிற்கு முன்பு திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு இரண்டு நேரப்பு,ஜையும் மற்றைய நாட்களில் அபிசேகமும் விளக்கு வைத்தலும் நடைபெற்று வந்தன. 1939இல் இரண்டு கால நித்திய பு,ஜை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஆசனத்தில் கும்பம் வைத்து முகம் சாத்தி அம்மனுக்கு பு,ஜை நடைபெற்று வந்தது. தர்மகர்த்தா திரு.சி.சிவகுரு 1946 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் கண்ணகை அம்மன் தாமிரவிக்கிரகம் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகத்தை செய்வித்தார். அதே வருடமே மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் வருடாந்த மஹோற்சவத்தினையும் முதன் முதலாக ஆரம்பித்தார். 1950 இல் நான்கு நேரப் பு,ஜை இடம்பெற்று 1952 இல் இருந்து ஆறுகாலப் பு,ஜை இடம் பெற்றுவருகிறது.




கௌரவிப்பு நிகழ்வு


பாடசாலை நிகழ்வுகள்

# வாழ்வாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு நிச்சயம் உதவிகள் வழங்கப்படும்

## ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வாழ்வியலை இழந்து தவிக்கும் மக்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்குடன் எத்தனையோ பல அபிவிருத்தித் திட்டங்களை நாம் பெற்றுக் கொடுதத்தும் வாழ்வாதாரம் குறைந்த பகுதியாக இப்பகுதி இருப்பதைக் கண்டு மனம் வேதனை அடைகிறது.

நிச்சயமாக உங்களுக்கான வாழ்வாதார உதவிகள் அனைத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கின்றேன் - என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்தார்.

அரியாலை கிழக்கு பெரிய தோட்டத்தில் வாழும் 28 குடும்பங்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக அப்பகுதி மக்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்மக்கள் தற்போது இரண்டு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். ஒன்று அபிவிருத்தி சார்ந்தது மற்றையது அரசியல் ரீதியான பிரச்சினை. தமிழ் மக்களின் அபிவிருத்தியை யார் தடுத்தாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசுடன் போராடி அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

மக்களின் சுதந்திரமான பேச்சுக்களின் ஊடாகத்தான் நாங்கள் அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றோம் எமது அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பேசவேண்டிய அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. அரசுடன் யதார்த்தமான முறையில் பேசுவதன் மூலம் தான் தமிழ் மக்களுக்கான இலக்கை அடையமுடியும்.

வறுமையில் வாழும் மக்களது வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே அமைச்சரின் குறிக்கோளாக இருக்கின்றது. அதற்காகத்தான் எமது கட்சி பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்றார்.

இச் சந்திப்பில் நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன், சமுர்த்தி உத்தியோகததர் பிரசாந்த், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தவராசா மற்றும் அப் பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

# குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைப்பு



தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன் புரிச்சங்கத்தினரால் நாவலர் நற்பணி மன்றத்தின் ஆதரவுடன் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய்ப்பிரிவற்கான குடிதண்ணீர் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி மு.உமாசங்கர் தலைமையில் புற்றுநோய்ப்பிரிவு கேட்போர் கூடத்தில் இடமபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நாவலர் நற்பணி மன்றத்தலைவர் வருமான வரி ஆலோசகர் ந.கருணைஆனந்தன் கலந்து கொண்டு குடிநீர்த்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்விற்கான ஆசியுரையினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், வாழ்த்துரைகளினை வலி.வடக்கு பிரதேசசபைத்தவிசாளர் சு.சுகிர்தன் ஆகியோர் வழங்கினர். (63)

வெள்ளி நற்சிந்தனை...



# உணவும் உணர்ச்சியும்

நம்முடைய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் உருவத்தில், நாம் உண்ணுகின்ற உணர்வுக்கும் முக்கியமான பங்குண்டு, ஆகவே, நம்முடைய சாத்திரங்கள் உண்ணும் உணவில் என்னென்ன அடங்கியிருக்க வேண்டும். எவ்வெப்போது உண்ண வேண்டும். ஒரு நாளைக்கு எத்தனை முறை சாப்பிடலாம் என்றெல்லாம் வரையறை செய்திருக்கின்றன.

சாப்பிடும் ஆசை பலருக்கு உண்டு. ஆனால் அந்த ஆசை நம்மையே சாப்பிட்டு விடும் என்பது பலருக்குப் புரிவதில்லை நிறையச் சாப்பிடுவதை விட சத்தான, சரிவிகிதமான சாப்பாடு சாப்பிட வேண்டும். உணவின் நியதிகள் ஒருவருக்குச் சொல்வது மற்றவருக்குப் பொருந்தாது. அவரவர் தரத்திற்கும உடல் திறத்திற்கும் வேலை முறைக்கும் ஏற்ப சாப்பிடத் தெரிய வேண்டும்.

சைவம், அசைவம் பற்றிக் கூட உகந்த சிந்தனை பிறந்தாக வேண்டும். வெறும் உணர்ச்சி பூர்வமான சண்டையாக மதத்தன்மை சார்ந்த பிரச்சினையாக மட்டுமே அது பேசப்படுகிறது. ஆராய வேண்டிய களங்கள் நிறையவே உண்டு. உலகம் முழுவதும் சைவமானால், தண்ணீரை உறிஞ்சுதல் குறையும். மிக அதிகமாக காற்றை மாசுபடுத்தும் காபனீரொக்சைட்டின் அளவு குறையும். விலங்குகளுக்காக உற்பத்தியாகும் தானியம் மட்டுமே உலகெங்கும் உள்ள மக்களின் பசித் தேவைக்கும் போதுமானது. வெளிநாடுகளில் சைவ உணவின் முக்கியத்துவம் தொடாபான விழிப்புணர்வு ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வரையறைகளோடு விரோதிகள், பாவிகள், அயோக்கியர்கள், தீய வழியில் பொருள் ஈட்டியவர்கள் ஆகியோர்கள் கொடுக்கும் உணவைச சாப்பிடக்கூடாது என்றும் நம்முடைய சாத்திரங்கள் நிபந்தனை போட்டிருக்கின்றன.

தீயவன் அளிக்கும் உணவு, நம்முடைய மனத்தை விடமாக்கி, நம்மையும் தீய செயல்களுக்குத் தூண்டி விட்டுவிடும்.

துரியோதனன் அளித்த விருந்தைத் துர்வாச முனிவர் ஏற்றுக்கொள்கிறார். அதன் காரணமாகத் துரியோதனின் தீய செயல்களுக்கு உடந்தையாக இருக்க வேண்டிய சூழ்நிலை அவருக்குத் தோன்றி விடுகிறது.

காட்டில் வசிக்கும் பாண்டவர்களிடம் துர்வாச முனிவரையும் அவருடைய சீடர்களையும் அனுப்பி வைக்கிறான் துரியோதனன் நேரங்கெட்ட நேரத்தில் அவரை அனுப்பி வைக்கிறான். அதன் விளைவாகப் பாண்டவர்கள் அவரை உபசரிக்கத்தவறி அவருடைய சாபத்திற்கு ஆளாக வேண்டும் என்பது அவருடைய திட்டம். ஆனால் கிருஷ்ணபகவான் தலையிட்டு துரியோதனின் திட்டத்தை தோல்வியுறச் செய்கிறார்.

**சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

இப்போது தமிழ் மக்களை இன்னுமொரு ஆபத்தான விளையாட்டுக்குள் தமிழ்த் தலைமைகளும் சில புத்திமான்களும் தள்ளி வருகிறார்கள்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான வழி அவர்களிடம் இல்லை. அதைப் பற்றிய அக்கறையும் அவர்களிடம் இல்லை. சிங்கள மக்களிடையே ஒரு நிதானமான சிந்தனைப் போக்கை ஊக்குவிக்கும் தேவை அவர்கட்கு இல்லை. எனவே, தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு மாற்றீடாக அவர்கள் மேற்குலகின் அழுத்தங்களையும் சர்வதேச விசாரணையையும் தமிழ் மக்களின் விழவுக்கான் வழியாகக் காட்ட முனைகின்றனர்.

சர்வதேச விசாரணை முற்றுமுழுதாகவே புலம்பெயர்ந்த தமிழரின் நெருக்குவாரங்களால் அமெரிக்கா இலங்கை மீது திணிக்கும் ஒரு விஷமச் செயல் என்ற கருத்து சிங்கள மக்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ளது. ஆனால், அமெரிக்க நோக்கம் தமிழ் மக்களின் தேசிய இன உரிமையை மீட்பதல்ல என்பது போர் நடந்த காலத்திலேயே நாம் அறிந்த உண்மை. அமெரிக்காவின் ஒரே கவலை ராஜபக்ஷ ஆட்சி சீனாவுடன் நெருங்கிய நட்புப் பேணுவது தான். அதற்காக இலங்கையை நேரடியாகத் தண்டிக்க இயலாது. எனவே, தமிழரின் பெயரில் தமிழருக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லாமல் மேற்குலகு இலங்கை அரசாங்கத்தை நெருக்குகிறது.

சர்வதேச விசாரணைகள் எப்படி முடிந்தாலும் அது இலங்கை அரசாங்கத்தின் பேரினவாதத்தைத் திருத்த உதவாது. மாறாகப் பாதகமான எந்தத் தீர்ப்பும் பேரினவாதக் குரோதத்தையே வலுப்படுத்தும். விசாரணைகளின் நோக்கம் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுடன் உறவற்றது என்று தெட்டத் தெளிவாகக் கூறப்பட்ட பின்பும் அதை வரவேற்றுத் தமிழ்த் தேசியவாதிகளும் சந்தர்ப்பவாதப் புத்திஜீவிகளும் ஏன் தமிழ் மக்களிடையே எதிர்பார்ப்புகளை உருவாக்குகிறார்கள்? ஐ.நா. மனித உரிமைக் கழகம் முன்னெடுக்கும் விசாரணை தமிழ் மக்களுக்கு என்ன நன்மையைத் தரும் என்று திட்டவட்டமாக எதையும் கூறாமல் அவர்கள் நடத்துகிற சுற்றிவளைப்பு ஆட்டங்களின் நோக்கம் என்ன? அது என்ன நோக்கமாயினும், அது நல்ல நோக்கமல்ல.

**– கோகர்ணன்**

சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் உலக நாடுகள் இனப்பிரச்சினையை கூர்மையாக அவதானிக்கின்றன என்றும் வருடக்கணக்காக தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டி வந்தபோதிலும் அரசியல் தீர்வுக்கான சாதக அறிகுறிகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. இந்த நிலையில் புதிய விடயமொன்று தேவைப்படுகின்றது. இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிய புதிய நம்பிக்கையை வளர்ப்பதற்கு சாதகமாக ஆட்சி மாற்றம் அமையும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகின்றது. ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் தண்டனை வழங்கினாலும் வழங்காது விட்டாலும் போர்க்குற்ற விசாரணை ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்பது கூட்டமைப்பின் நம்பிக்கை.

அதனால்தான் ஆட்சி மாற்றத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்திருக்கும் "எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு" என்ற அமைப்பில் கூட்டமைப்பு அங்கம் வகிக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை கணிசமான காலத்துக்கு கைகொடுக்கும் என்று இவர்கள் கணக்குப் போடுகின்றார்கள். ஆனால் சமகால யதார்த்தம் வேறாக இருக்கிறது.

அரசாங்கம் நம்பிக்கை வைத்து வளர்க்கும் கடுங்கோட்பாட்டு வாக்குகளிலேயே ரணில் கவனம் செலுத்துகிறார். ஐக்கிய தேசியக் கட்சி சமஷ்டி தீர்வைக் கைவிட்டு விட்டது என்ற அறிவிப்பும், பதின்மூன்றாவது திருத்தத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று விமல் வீரவன்சவுக்கு கூறியதும், பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென வலியுறுத்தும் ஊடகவியலாளர் மாநாடுகளில் பங்குபற்றாமல் ஒதுங்கியதும் கடுங்கோட்பாட்டு வாக்குகளை இலக்கு வைத்த செயற்பாடுகள்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வருவது சாத்தியமில்லை என்பது ஒருபுறமிருக்க, இனப்பிரச்சினையின் தீர்வுடன் அந்தக் கட்சியைச் சம்பந்தப்படுத்துவது பிழையான அணுகுமுறை. அன்றுதொட்டு இன்றுவரை ஐக்கிய தேசியக் கட்சி மறைவான பேரினவாத நிகழ்ச்சி நிரலுடனேயே செயற்பட்டு வருகின்றது. இதனைத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் விளங்கிக் கொள்ளாதது போன்று நடிப்பது துரதிர்ஷ்டமானது.

சர்வதேச சமூகம் தீர்வினைப் பெற்றுத் தரும் என்று ஐந்து வருடங்களாக நம்பிக்கையை வளர்க்கிறோம். இப்படி நம்பிக்கைகளை மட்டும் வளர்த்துக் கொண்டிருந்தால் தீர்வு எங்களை விட்டு வெகுதூரம் சென்றுவிடும். பிரச்சினைக்கான தீர்வை நாங்களே முயற்சித்துப் பெறவேண்டும். **– சிவா சுப்பிரமணியம்**

# காணாமற் போனோர் விசாரணை ஐந்தாவது அமர்வு முல்லையில்

## – நாளை முதல் ஆரம்பம் –




(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஐந்தாவது பகிரங்க அமர்வுகள் நாளை 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறவுளளது.

ஜூலை 5ஆம், 6ஆம் திக்தி களில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் ஜூலை 7ஆம், 8ஆம் திகதிகளில் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்திலும் இந்த ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

ஆணைக்குழு தனது முன்னைய பகிரங்க அமர்வு களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கியதாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடாத்தியுள்ளது.

மட்டக்களப்பில் ஜூன் 6ஆம் திகதி முதல் ஜூன் 9 வரை இடம்பெற்ற முன்னைய அமர்வின் போது, 195 முறைப்பாடுகள் சம்பந்தமான சாட்சியங்களை ஆணைக்குழு விசாரணை செய்தது. அதற்கு மேலதிகமாக ஆணைக்குழு 216 புதிய முறைபாடுகளையும் இந்த நான்கு நாள் பகிரங்க அமர்வுகளில் பதிவு செய்தது. 1990களில் தமிழ்ழ விடுதலைப் புலிகளி னால 163 முஸ்லிம்களைப் படுகொலை செய்ததாகக் குறிப்பிடப்படும் குருக்கள் மடம் படுகொலை தொடர்பான சாட்சியங்களையும் ஆணைக்குழு பதிவுசெய்திருந்தது.

இதுவரை வரை ஆணைக்குழு 18,789 முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது, இதில் ஏறத்தாழ 5,000 முறைப்பாடுகள் பாதுகாப்புப் படையினர் காணாமற் போனமை தொடர்பாக அவர்களது உறவினர்களால் வழங்கப்பட்டவையாகும். ஆணைக்குழு இதுவரை 462 முறைப்பாடுகள் ,தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் அவை மேலதிக விசாரணைகளுக்காக சுயாதீன புலன்விசாரணை அணியொன்றினால் ஆராயப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# பங்களாதேஷிலிருந்து மருந்து கொள்வனவு

## – உடன்படிக்கை கைச்சாத்து –



பங்களாதேஷிலிருந்து மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையும் பங்களாதேஷம் அண்மையில் கைச்சாத்திட்டது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பங்களாதேஷ் அரசாங்கத்தின் சார்பில் அந்நாட்டு சுகாதார்அமைச்சர் மொஹமட் நஸீம் ஆகியோரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கை அரசு வெளிநாடு ஒன்றிலிருந்து நேரடியாக மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடப்பட்டது.இதுவே முதற் தடவையாகும்

# இளைஞர்கள் மத்தியில் அதிகரித்த நீரிழிவுநோய்

இலங்கையில் இளைஞர்கள் மத்தியில், நீரிழிவு நோய் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக அண்மைய ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

22 முதல் 30 வயதிலான இளைஞர்கள் நீரழிவு நோயினால பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான ஆய்வு வடக்கு கிழக்குப் பகுதிகளை தவிர்த்து, கடந்த 2006 ஆம் ஆண்டு முதல தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டு வந்தது.

இதில் கிராமங்களைவிட நகரப் பகுதியிலேயே நீரிழிவு நோயின் தாக்கம் அதிகம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மக்களிடையே நீரிழிவு நோய், அதன் ஆபத்து, வாழ்க்கை முறையை மாற்றி அமைக்க வேண்டிய தேவை ஆகியவை குறித்து அரசு பல விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும், அவை போதிய அளவில் இல்லை என கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறையின் தலைவர் டாக்டர் சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் மத்தியில் உணவுக் கட்டுப்பாடு இல்லை, ஆரோக்கியமான உணவை அவர்கள் உண்பதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# விலங்குபலி பூஜையை நடாத்த அனுமதி பெறப்பட வேண்டும்

## – பிரதம நீதியரசர் தெரிவிப்பு –

(கொழும்பு)

உரிய அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்ட பின்னர், விலங்கு பலி பூஜைகளை நடாத்த இடமளிக்க முடியும் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய சங்க சம்மேளனம் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை விசாரித்த மேன் முறையீட்டு நீதிமன்றம் சிலாபம், முன்னேஸ்வரம் காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த விலங்கு பலி பூஜைக்கு இடைக்கால தடைவிதித்து உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி காளியம்மன் ஆலயத் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே மொஹான் பீரிஸ் அனுமதிப் பத்திரம் பெற்று பலி பூஜையை நடாத்த இடமளிக்கலாம் கூறியுள்ளார்.

எனினும் அனுமதிப் பத்திரத்தைப் பெற்று விலங்குகளை பலியிடும் பூஜை நடாத்த இடமளிப்பதை தாம் எதிர்ப்பதாக தேசிய சங்க சம்மேளத்தின் தேசிய அமைப்பாளர் பஸ்ஸர முல்லே தயாவங்ஸ தேரர் கூறியுள்ளார்.


# விண்வெளிக்கு செய்மதி அனுப்ப 400 மில்லியன் ரூபா தேவை

## திறைசேரியிடம் உதவக்கோரிக்கை

இலங்கையின் தேவை கருதி, உள்நாட்டு விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டுவரும் செய்மதியை விண்வெளிக்கு அனுப்புவதற்கு 400 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், இத்தொகையைப் பெற்றுத்தருமாறு திறைசேரியிடம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு கோரியுள்ளது.


இலங்கையில் விண்வெளி தொடர்பான நடவடிக்கைகளில ஈடுபட்டு வரும் ஆதர் சி.கிளார்க் நிறுவனத்தினூடாக உள்ளூர் விஞ்ஞானிகளால் செய்மதியொன்றை விண்வெளிக்கு அனுப்புவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தொழில்நுட்பம மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சிறியதொரு செய்மதியை விண்வெளிக்கு அனுப்பி, அதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொள்ள



உள்ளூர் விஞ்ஞானிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

"நெனோ செடலைட்" என்று இந்தச் சிறிய செய்மதி அழைக்கப்படுகிறது. இது இலங்கை விஞ்ஞானிகளின் முழுமையான திறனினால் மட்டுமே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும், இதனை விண்வெளிக்கு அனுப்புவதற்கான ரொக்கெட்டுக்காக இந்தியா அல்லது சீனாவின் உதவியை நாட வேண்டி ஏற்படும் என்று அமைச்சர மேலும் கூறினார்.



# பரமர் சங்கமம்

'ஊழலைக் கொலை செய் அல்லது உன்னைக் கொலை செய்வோம்' இவ்வாசகத்தைச் சமீபத்தில் ஊடகங்களில் பார்த்தபோது எனக்கு பல்வேறு எண்ணங்கள் பொறி தட்டின.

கொலை வெறியைத் தூண்டியும் அச்சுறுத்தியும் அது எந்தச் சடப்பொருளாகட்டும் இத்தகைய சிந்தனைகள் எமது இளைஞர்,யுவதிகளிடம் ஊடுருவி உள்ளதாலே வாள்வெட்டு, கத்திக் குத்து எண்ட சங்கதிகள் பெருகிக் கொண்டிருக்கு.

வவுனியாவில் ஒண்டு,இரண்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியாவைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் மேற்படி மாவட்டங்களில் தலையெடுத்துள்ள லஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிராகப் பேரணி போகையில் வாசகத்தையும் கோஷமாக எழுப்பி இருந்தனர்.

நாடுபூராகவும் புதிதாகத் தலைதூக்கியுள்ள கொலை வெறிக்கு எந்த மார்க்கத்தைக் கடைப்பிடிக்க? ஊழல் என்பது இல்லாத ஒன்றில்லை, புதிதாக அது மனித சமுதாயத்தில் தோன்றியதும் இல்லை.

சனத்தொகை பெருகப்பெருக எல்லாமே பெருகிவிட்டன. வேலை வாய்ப்பு, பணப்பெருக்கம் அந்நியச்செலாவணி, வெளிநாட்டுடொலர் போன்ற புழக்கங்களால் ஊழல், லஞ்சம் என்னும் நோயும் காவிச்செல்லப்பட்டுக் கொண்டுள்ளது.

கடைக்காரனிடம் ஊடகவியலாளன் பொறிக்கப்பட்ட விலையில் இருந்து கூடுதல் விலைக்கு விற்பது பற்றிக் கேட்டால் கொலை மிரட்டல் விடும் காலமிது. இது ஊழலில்லையா? செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி கையிருப்பு இல்லை என் கையில் கூடுதல் விலைகொடுத்து வாங்கத் தயாராவது லஞ்சமில்லையா?

இவைகளெல்லாம் கீழ் மட்டமக்கள் வாழ்வியலை வசதி படைத்தவர் மட்டங்களில் பரவும் நோய்காவியாக லஞ்சம் ஊழல்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன . அதைப்பற்றிக் தெரிந்திராத நபரொருவருக்கு தன்னுடைய வேலை முடிய வேண்டுமென்பதற்காகத் திணிக்கப்படும் லஞ்சமே அரச திணைக்களங்கள் உள்ளும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் மத்தியிலும் ஊழல்களைச் செய்யத் தூண்டும் ஆயுதமாகவும் பாவிக்கப்படுகிறது.

அரசதிணைக்களம் ஒன்றில் வேலை பரர்க்கும் ஒருவரின் வீட்டுக்கு திடீரென விருந்தாளிகள் வந்து விட்டால் விருந்தாளிகளை குறையில்லாமல் வடிவாக கவனித்து அனுப்ப வேணுமெண்டால் திணறத்தேவையில்லாமல் சமயத்துக்குக் கைகொடுத்து உதவும் நண்பனாக லஞ்சம் திகழ்வதை இன்றைய காலங்களில் பரக்கக் காணலாம்.


சீருடையை அணிந்து சந்தியில் நின்றால் போதியளவு பணம் கைக்குக் கிடைக்குமெண்டால் பாருங்களேன். மறுதரப்பில் உரிய ஆவணங்கள், ஒழுங்குகள் பேணப்படாத ஊழல்கள் தானே காரணமாகின்றன.

என்ரைமோன் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகப் பலமுறை முயன்று தோல்வி கண்டவன் இறுதியாக எல்லாம் சரிவர முடிஞ்சுது. மூண்டுஇலட்சம் பெரிய இடத்துக்கும் கட்டாததால் பயணம் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு யாரை எப்புடிக் கொல்லுறே! உயிரில்லா ஜடங்களுக்கு உயிர் கொடுத்தவர்களே உயிரை வாங்கிறேண்ட மாதிரியெல்லை இருக்கு... சொல்லுங்க பாப்பம்.

16. # இந்த அடையாளம் எதனைக் குறிக்கிறது.

(i) கூட்டல் (ii) கழித்தல் (iii) பெருக்கல்

தரப்பட்ட படவிளக்கத்தை நன்கு அவதானித்து விடைதருக.





17. வெளியே வினாக்குறி வந்துள்ள இடத்தில் வரும் இலக்கம் யாது?

(i) 15 (ii) 13 (iii) 16

18. உள்ளே வினாக்குறிகள் வந்துள்ள இடத்தில் வரும் இருபடங்களும் எவை?





19. கீழே தரப்பட்ட படத்தை நன்கு அவதானித்து ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பைப் பெற எந்த இரு படத்தைப் பொருத்த வேண்டும்.



(i) (ii) (iii)

20.



(i) (ii) (iii)

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - I
1 மணி 15 நிமி



# கல்வி முரசு


* வித்தியாசமான உருவின் கீழ் கோடிடுக.

01.



(i) (ii) (iii) (iv)


02.



(i) (ii) (iii) (iv)


* புள்ளி கோட்டில் வரும் விடையைக் கண்டு கோடிடுக.

03.





(i) 3 (ii) 4 (iii) 5

04.




(i) 1 (ii) 2 (iii) 3

05) தரப்பட்ட அமைப்பின் மாற்றத்தைக் கண்டு பிடித்து பெட்டியினுள் வரும் சரியான விடையின் கீழ் கோடிடுக.




(i) (ii) (iii)

06. **மலகா** = 148 எனின் **காமல** = - - - - இன் பெறுமானம் என்ன.

(i) 481 (ii) 814 (iii) 418


07. தரப்பட்ட ஒழுங்கை அவதானித்து வெற்றுக் கூட்டில் வரும் விடை யாது?

673 → 736 → 367 → ☐

(i) 763 (ii) 637 (iii) 673


**வினாக்குறி வந்துள்ள இடத்தில் வரும் விடையைக் கண்டு கோடிடுக.**


08.



(i) (ii) (iii)


09.






(i) (ii) (iii)

10.







(i) (ii) (iii)



11.







(i) (ii) (iii)

* **வெற்றுக் கூட்டில் வரும் விடையைக் கண்டு கோடிடுக.**


12.






(i) (ii) (iii)


13.





(i) (ii) (iii)

14. **தரப்பட்ட நிறையை அவதானித்து தராசின் நிறையைக் கண்டு கோடிடுக.**




(i) 5 kg (ii) 6 kg (iii) 7 kg

* **கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடைதருக.**

**4 * 2 = 6 # 2** இங்கு சமன் என்பது சமனெனக் குறிக்கிறது இதற்கு ஏற்ப இருபுறமும் சமனாக இருக்க வேண்டுமானால்

15. * **இந்த அடையாளம் எதனைக் குறிக்கிறது.**

(i) கூட்டல் (ii) கழித்தல் (iii) பெருக்கல்

விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2014 - கல்விமுரசு

# ஆசிரியரின் முன்மாதிரியான செயற்பாடு கல்விச் சமூகத்தால் குவியும் பாராட்டுக்கள்



தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் போட்டி நிகழ்ச்சியில் பங்குகொண்டு ஐந்து இலட்சம் ரூபாவை கிளி. ம.வி ஆசிரியரான இ.அரவிந்தன் அப்பணம் முழுவதையும் தன்னுடைய மாணவனான விபத்தில் கையொன்றை இழந்த சு.சுனேந்திரனுக்கு வழங்கி கல்விச்சமூகத்தினரும் பெரியார்களினதும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமான இறுவட்டு நிகழ்வு கிளி ம.வி. மண்டபத்தில் பாடசாலை அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட கிளி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் உரையாற்றுகையில், இன்று இவ் இறுவட்டு வெளியிடப்படுவதற்கு காரணமாக ஆசிரியர் அரவிந்தன் பூநகரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் போர் நடவடிக்கையின் போது தமது குடும்பத்துடன் முள்ளிவாய்க்கால் வரை சென்று தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்த நிலையில் வாழும் இவ்வாசிரியருக்கு எப்படி இந்தத் தியாக உணர்வு வந்தது இப்படியொரு சம்பவத்தை நான் எங்கும் கேள்விப்பட்டதுமில்லை.

நடந்ததுமில்லை அவர் கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் மிக்கவர். இவருடைய இச்செயற்பாட்டை கண்டு கொண்டிருக்கும் தாயார், சகோதரி, மனைவி சிறிய பிள்ளைகள் மாணவர்களின் மனநிலை எப்படியிருக்கும் இவரது செயற்பாட்டை இறுவட்டு மூலம் வெளிக்கொண்டு வந்த பாடசாலைச் சமூகத்தையும் பாராட்டுகிறேன் என்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சி.இளங்குமரன் இறுவட்டு வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

நிகழ்வில் கல்விச்சமூகத்தினர், பெற்றோர், நலன் விரும்பிகள் என பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்தனர். (112)

# கிளைத் தலைவர் நியமனம்

(வடமராட்சி)

பெங்களூர் ஸ்ரீ ரவிசங்கர் ஆச்சிரம வாழும் கலையக இலங்கைக் கிளைத் தலைவராக கே.பத்மநாதன் (பண்டாரவளை தென்மாகாண அபிவிருத்தி) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள வாழும் கலையக அலுவலகத்தில் அண்மையில் இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. தெரிவு செய்யப்ப்ட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு,

பொதுச்செயலாளராக என்சிவ பிரகாசம் (திருகோணமலை கிழக்கு மாகாண வட மத்திய மாகாண அபிவிருத்தி) பொருளாளராக எஸ்.தர்மராஜா (பருத்தித்துறை - வடமாகாண அபிவிருத்தி), இணைச்செயலாளராக எஸ்.லக்ஸ்மனன் (கொழும்பு மேல் மாகாண அபிவிருத்தி).

இணைப்பொருளாளராக திருமதி ஜாமினி விவேகானந்தன் (வவுனியா நிதி திட்டமிடல் இணைப்பாளர்), பணிப்பாளராக எஸ்.தெய்வேந்திரன் (கொழும்பு - மத்திய மாகாண அபிவிருத்தி). (01)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடை பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "சமயவாழ்வு" என்னும் பொருளில் விகடகவி மு.திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றவுள்ளார்.

# வலி.கிழக்கு பல.நோ.கூ.சங்கத்தின் சர்வதேச கூட்டுறவு தின விழா

வலிகாமம் கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 92 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா நாளை மறுதினம் காலை 09.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணி மணடபத்தில் நடைபெறவுள்ளது.

வலி. கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசு, மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் என்.கே.ஜெயசிங்க ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஞா.ஜெயமேரி கொன்சி, இளைப பாறிய அதிபர் வ.ஆறுமுகம், முன்னாள் பொது முகாமையாளர்களாகிய மு.ஆனந்த கிருஸ்ணன், த.ரவீந்திரதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது சங்கத்தினால் நடாத்தப்பட்ட பேச்சு மற்றும் வினா விடைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும், சங்கத்தின் முன்னாள் இயக்குனர் சபை உறுப்பினர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. அதேவேளை சங்கத்தின் சிறந்த பணியாளர், சிறந்த கிளை முகாமையாளர், சிறந்த விற்பனையாளர், ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளதுடன் சிறப்பாகச் செற்பட்ட கிளைக்கு சிறப்பு பரிசிலும் வழங்கப்படவுள்ளது.

மேலும் கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவித்து பரிசில் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளது. (03).

# ஆனி உத்தரப் பூசை

(குருநகர்)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு, ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆனி உத்தரம் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட உள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் தொடங்கும். 9 மணிக்கு சமய நிகழ்வுகள் நடைபெறும்

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று அம்பாள் அன்ன வாகனத்தில் வீதியுலா எழுந்தருளுவார்.

மதியம் 12 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (68)

# மகா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு அத்தாய் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட மஹா கும்பாபிஷேகம் இன்று இடம் பெறுகின்றது.

பூர்வபக்க ஸப்தமி திதியும் உத்தர நட்சத்திரமும் சிங்க லக்கின குருவோரையும் கூடிய காலை 9 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

பிரதிஷ்டா பிரதம குரு கிரியா தத்துவநிதி சிவஸ்ரீ சிவகுருநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் கும்பாபிஷேகத்திற்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பிரமாச்சார்ய சுவாமிகள் அருளாசியினை வழங்குகின்றார். (இ)

# நாவலர் வழி வாழ்ந்தவர் இந்துபோட் இராசரத்தினம்

## இந்து போட் இராசரத்தினத்தின் 130 ஆவது பிறந்ததினம் இன்றாகும் அதனையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது



பெருங்கனவான் சு.இராசரத்தினம் நாவலர் வழியில் சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றியவர் ஆவார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கனவுகளை நனவாக்க ஆரம்பிக்கப் பெற்ற சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் முதலாவது தலைவர் சேர்.பொன். இராமநாதன் ஆவார். இச்சங்கத்தின் செயலாளராக இருந்து சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் கற்க வேண்டுமென்ற நாவலரின் எண்ணத்தை நிறைவேற்றியவர் உயர்திரு.சு. இராசரத்தினம் என்றால் மிகையாகாது. இவரது நிர்வாகத்தில் 187 பாடசாலைகளும் ஒரு பயிற்சிக் கலாசாலையும் இருந்தன இச்சைவாசிரியர் கலாசாலையிலேயே யான் ஈராண்டுகள் பயிற்சி பெற்று வெளியேறினேன்.

திருநெல்வேலி சைவாசிரியர் கலா சாலையின் அதிபராக விளங்கியவர் சுவாமிநாதன், உபஅதிபராக விளங்கி யவர் சைவப்பெரியார் பொ. கைலாசபதி சைவ சமயம், தமிழ்மொழி விரிவுரையாளராக விளங்கியவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இப்பெரியார்களை எல்லாம் தேடி அழைத்து வந்து சைவாசிரியர் கலாசாலையில் சைவத்தமிழ் ஆசிரியர் பயிற்சி சிறப்புற நடைபெறவழிவகுத்தவர் பெரியார் இராசரத்தினம் அவர்களே இப்பணி மூலம் சைவாசிரியர்கள் தமிழ்ப்பாடசாலைகளில் சைவம், தமிழ்மொழி இலக்கியம் முதலிய வற்றைதிறம்படப்போதிக்க வேண்டும் என்றும் அத்துடன் புவியியல், வரலாறு, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களையும் அவர்கள் போதிக்கப்பயிற்சியும் கொடுத்துக் கற்பிக்க வைத்தார்.

அன்றைய காலகட்டத்தில் இவர் செய்த பணிபோற்றுதற்குரியதாகும். இப்பெரியார்களிடம் கற்கும் வாய்ப்பு சைவாசிரியர் கலாசாலையில் பயின்றமையால் எனக்குக்கிடைத்தது. இவர்களிடம் கற்றமையை ஒரு பேறாகவே கருதுகிறேன். இப்பயிற்சிக்கலாசாலையை ஆரம்பித்துத் திறம்பட வளர்த்துவந்த சு.இராசரத்தினம் அவர்களைச் சைவத்தமிழ் உலகம் என்றும் நினைவில் நிறுத்தும்.

தாய் தந்தையரை இழந்த, வறுமைக் கோட்டிற்குள் வாழ்ந்த பிள்ளைகளுக்கு வாழ்வளிக்கிறோம் என்று கூறி மத மாற்றத்தில் ஈடுபட்ட மிஷனறிமார்களுக்கு பேரிடி விழுந்தாற்போல ஆண்களுக்கும் பெண்களுக்கும் எனத்தனித்தனி இரு சைவச்சிறுவர் இல்லங்களை நிறுவி அப்பிள்ளைகளை அவற்றில் சேர்த்தார். அவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, கல்வி ஆகியவற்றை வழங்கி அநாதரவான சிறுவர்களுக்குத் தந்தைபோல இருந்து சேவை செய்தார். நாவலர் காட்டிய வழியில் தொண்டாற்றிய பெரியாரின் சேவையினால் சைவத்தமிழ் மக்கள் தமது பண்பாடு, சமயம் ஆகியவற்றைப் பாதுகாக்க முடிந்தது என்றால் மிகையாகாது.

ச.சரவணமுத்து
இளைப்பாறிய அரசகரும மொழித்திணைக்கள அத்தியட்சகர்

# மணிவாசகர் குருபூசையை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினால் மணிவாசகர் குருபூசை தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

திருமுறை மனனப்போட்டி
பாலர் பிரிவு தரம் -01

உ.யாகினி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), கு.யுகானா (சுன்னாகம் நாகேஸ் வரி வித்தியாசாலை), சு.கீர்த்தனா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி).

சிறப்புப் பரிசு பெறுவோர்

வி.அக்ஸ்ரிகா (வண்ணை. நாவலர் மகா வித்தியாலயம்), யோ.ஜயஷாமுகி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), பா.துலக்சனா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), ஜெ.தக்ஷனன் (கொககுவில் இந்து ஆரம்ப பாடசாலை), பி.சிவாத்மிகா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி).

தரம் -02

ம.மதுவந்தி (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி). ஸ்ரீ.சர்வஜித் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), தே.கபிசாயினி (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம். (தொடரும்...)

## யாழ்ப்பாணம் மாநகரசபையில் மின்னியலாளர் வகுப்புIII பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான

## விண்ணப்பம் கோரல் - 2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் மாநகரசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி பதவியணிகளில் உள்ள வெற்றிடங்களின் விபரங்களிற்கமைய, கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரமும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQம் இலக்க கடிதத்திற்கமைவாகவும், மின்னியலாளர் வகுப்புIII பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக குறிப்பிட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள்,அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்
3. நியமனம் பெறுபவர்கள் 3 வருட தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும் அத்துடன் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்..
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதி 18.07.2014 அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களிற்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தொழில்நுட்பம் சார் சேவைகளிற்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கௌரவஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை தொழில் அனுபவம், வேலைமனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டுதெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளிற்கமைந்து ஒழுகுதல் வேண்டும். மாநகரசபையில் பதிலீட்டுதொழிலாளியாக கடமையாற்றியவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. யாழ் மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் ரூபா 250 ஐச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து உரிய விண்ணப்பபடிவத்தை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பபடிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர்,யாழ் மாநகரசபை, பருத்தித்துறைவீதி, நல்லூர்"** என்று முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. விண்ணப்பபடிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.ஆட்சேர்ப்புதிட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென தெரியவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தி வைக்கப்படும்.

**விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவுத்திகதி 18.07.2014 ஆம் - திகதியன்று அல்லது அதற்கு முன்பாக .எமக்கு கிடைக்க கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.அதற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும**

**கல்வித் தகைமை :**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத் அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரேதடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனத்தில் ஆறு மாதங்களிற்கு குறையாத மின்னியலாளர் பயிற்சி அல்லது மட்டம் II இல் மின்னியலாளர்(Electrician) தொழில் சார் கற்கைநெறி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம் :**

01.01.2013 ம் திகதிய ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணகுறிப்பின்படி மாதாந்த சம்பளஅளவுத்திட்டம் Rs. 12210 – 18x130 - 14550(PL-2-2006 A) ஆகும்.

2014.07.03

**மாநகரசபை அலுவலகம்**
**பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C/3729)

# தீவிரவாதிகளை கண்டவுடன் சுடும் புதிய சட்டம் பாகிஸ்தானில் அமுல்

பாகிஸ்தானின் பழங்குடியினர் வசிக்கும் வடக்கு வசிரிஸ் தான் தலிபான் தீவிரவாதிகளின் மறைவிடமாக செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில் அச்சுறுத்தலாகவுள்ள தீவிரவாதிகளை கண்டவுடன் சுட்டுகொல்லும் தீவிரவாத தடுப்புச் சட்டம் ஒன்று பாகிஸ்தான் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பாதுகாப்புச் சட்டம்-2014 என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தப்புதிய சட்டத்தின்படி, தீவிரவாதிகளைக்கண்டவுடன் சுடுவதற் கான உத்தரவினை பிறப்பிக்கும் அதிகாரம் அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகத்திற்குரிய எந்த இடத்திலும் நீதிமன்றின் அனுமதியின்றி நுழைந்து சோதனையிடும் அதிகாரமும் அரசின் பாதுகாப்பு படையினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்குரிய நபரை கைது செய்து 60 நாட்கள்வரை பிணை வழங்காமல் சிறையில் அடைக்கவும், வன்முறை மற்றும் தீவிரவாத செயல்களில் ஈடுபடு வோர், சைபர் கிரைம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் தொடரபான குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள், சட்டமீறலாக பாகிஸ்தான் எல்லையை கடக்க முயற்சிப்பவர்கள் ஆகியோருக்கு குறைந்தபட்சம் 20ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கவும் இந்த புதிய தீவிரவாத தடுப்புச் சட்டம்-2014 வழி,வகை செய்கிறது.

பாகிஸ்தானை ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்ட மசோதா முன்னதாக நாடாளுமன்ற மேல் சபையில் கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தான் அரசியலமைப்புச்சட்டம் அளித்துள்ள மனித உரிமைகளை மீறும் வகையில் இந்தப் புதிய சட்டம் அமைந்துள்ளது என்று வலதுசாரி இயக்க மான ஜமாத் இ இஸ்லாமி இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்தச் சட்டம் 2-7-2016 வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரத் தடையை தளர்த்தியது ஜப்பான்

ஜப்பானிய அதிகாரிகளின் அனுமதி தேவைப்படாமல் வட கொரியாவிற்கு பணப் போக்குவரத்து மற்றும் மனிதாபிமான நோக்கங்களுக்காக ஜப்பானிய துறைமுகத்திற்கு வரும் வட கொரியக் கப்பல்களுக்கான நுழைவு அனுமதி போன்ற சில விடயங்களை ஜப்பானிய அரசு தளர்த்தியுள்ளதாக நேற்று முன்தினம் அறி வித்துள்ளது

கடந்த மே மாதம் கடத்தல்ச் சம்பவம் தொடர்பான மறுவிசாரணையைத் தொடக்க வடகொரியா முன்வர பதிலுக்கு ஜப்பானும் அந்நாட்டிற்கு விதித்துள்ள பொருளாதாரத் தடைகளில் சிலவற்றைத் தளர்த்துவதாக அறிவித்தது. கடத்தப்பட்டவர்களில் எவரேனும் உயிருடன் இருப்பது தெரியவந்தால் ஜப்பானியப் பிரதமர் ஷின்சா அபேயின் செல்வாக்கு உயரும் என்று நம்பப்படுகின்றது.

# ஆனந்தத்தை அள்ளித்தரும் ஆனி உத்தர தரிசனம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவ பெருமானுக்குரிய விரதங்களில் இன்றைய ஆனி உத்தரமும் ஒன்றாகும்.

இதில் ஒரு தனி விஷேடம் என்னவென்றால் சிவபெருமானுடைய தரிசனம காண்கின்ற ஒருபுனிதம் நிறைந்த அற்புத விரதமாகும். தில்லைச் சிதம்பரத்திலே நடராஜப் பெருமானுடைய தில்லைத் தாண்டவ தரிசன நிகழ்வு இன்று அதிகாலையிலே மிகச் சிறப்பாக நடைபெறும்.

இன்று அதிகாலைப் பொழுதிலே தில்லை நடராஜப் பெருமானுடைய தரிசனம் காண்பதற்கு அடியார்கள் நான் முந்தி நீ முந்தி என்று இடித்துத் தள்ளிக் கொண்டு முன்னேறும் காட்சி பக்தி பூர்வமானது.

எம்பெருமான் நடராஜருக்கு பால், தயிர், தேன், இளநீர், பஞ்சாமிர்தம் என்பன வற்றால் அபிஷேகம் நடைபெறும் போது அடியார்கள் பலர் அதைக் காண வேண்டும் என்ற ஆவல் மீதூரப் பெற்று இந்தச் சிதம்பரம் சந்நிதானத்திலே குழுமுவார்கள். குடம் குடமாக நிகழும் இந்த அற்புத அபிஷேகம் காணக் கிடக்காத ஒன்று.

தில்லைச் சிதம்பர நடராஜர் சிவகாமி அம்பாள் சமேதராகக் காட்சிதரும் அழகே தனி. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலை வனாகிய சிவபெருமான் பொன்னம்பலத்தாடும் தில்லைச் சிதம்பர நடராஜனாக கனகசபையிலே காட்சிதரும் பேரழகு நிறைந்த அற்புதக் காட்சி காணப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

இந்தியாவிலே வாழும் சைவ மக்கள் இன்றைய ஆனி உத்தர தரிசனத் துக்காக சிதம்பரத்திலே கூடி ஒற்றுமையாக ஒன்றாகச் சேர்ந்து வழிபாடு நிகழ்த்துவார்கள். விரதமிருப்போர் மதியம் ஒருபொழுது உண்டு முடியுமாயின் ஒரு சிவனடியாருக்கு உணவளித்து இரவு பால்பழம் அருந்தலாம்.

இலங்கையில் இந்த ஆனி உத்தர தரிசனம் ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர் சிவன்கோயிலிலும் நல்லூர் சிவன் ஆலயத்திலும் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயிலிலும் கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோயிலிலும் மிகச் சிறப்பாக நடைபெறும். அதிகாலை வேளையிலே அழகு மிகுந்த மலர்மாலை கள் நடுவிலே அசைந்தாட நடராஜப் பெருமான் தில்லைத் தாண்டவமாடும் அற்புத அழகுமிளிர் காட்சி காணக் கண்கோடி வேண்டும்.

அங்கும் இங்கும் அலைந்து அசைநது ஆடிஆடிச் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் செய்கின்ற பேரழகுக் காட்சி மெய்சிலிர்க்க வைக்கின்ற அற்புதக் காட்சியாகும்.

ஆகவே, சைவசமயத்து அன்பர்கள் அனைவரும் இன்றைய ஆனி உத்தர தரிசனம் கண்டு சிவனின் திவ்ய திருவடிகளை வாழ்த்தி வணங்கி, உலக வாழ்வில் சகல சௌபாக்கியங்களுடன் வாழ இறையாசி பெற்று உய்தி பெற நாமும் துணை நிற்போமாக.

**தெய்வத்தமிழ்ச்சுடர்**
**இராசையா ஸ்ரீதரன்**

# மாகாண அதிகாரங்களை சரியாக பயன்படுத்த வேண்டும்

## சிறிரங்கேஸ்வரன் கோரிக்கை



மாகாணசபைத் தேர்தல் சமயத்தில் வாக்குகளை சமயோசிதமாக அபகரிப்பதற்காக தேர்தல் பிரசார மேடைகளில் மாவீரர்களுக்கு அஞ்சலிகளும் அகவணக்கங்களும் செலுத்தி அவர்களின் ஆன்மாக்களில் காட்டிய அனுதாபங்களை மாகாணசபை அமர்வுகளில் கூட்டமைப்பினர் ஏன் அனுஷ்டிக்கவில்லை? என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

அல்வாய், தேவரையாளி நரசிங்க வைரவர் கோவிலடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் ஆசிரியர் வேலழகன் விமலன் தலைமையில் மக்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1987 யூலையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் 13ஆவது அரசியல் அமைப்பில் கூறப்பட்ட அதிகாரங்களில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வடக்கு மாகாணசபைக்கு மட்டுமல்ல இலங்கையிலுள்ள அனைத்து மாகாணங்களுக்கும் மத்திய அரசு வழங்காமல் முடக்கியுள்ளமை யாவரும் அறிந்ததே. ஆனாலும் ஏனைய மாகாண அமைச்சுக்கள் தமது நிர்வாகங்களை திறன்பட செயற்படுத்தி மக்களுக்கான நல்லாட்சியைப் புரிந்து வருகின்றன. ஆனால் வடக்கு மாகாணசபைக்கு முதல்வராக ஒரு நீதியரசர் இருந்தும் மாகாண சபையினுடைய அதிகாரங்களைத் தெரிந்தும் கூட மாகாணசபையை நடாத்த முடியாமல் உள்ளமை ஏன்? பொலிஸ், காணி அதிகாரங்களைத் தவிர ஏனைய அமைச்சுக்களை, நிர்வாகங்களை ஏனைய மாகாணங்களைப் போல் நடைமுறைப்படுத்துவதில் வடக்கு மாகாணசபை முதல்வருக்கு உள்ள தடையை மக்கள் மன்றத்தில் கூறமுடியுமா? அவர்களால் கூறமுடியாது. ஏனெனில் ஏனைய அதிகாரங்களை நடைமுறைப்படுத்தினால் மாகாண அமைச்சுக்கு மத்திய அரசு அதிகாரங்களை வழங்கியுள்ள விடயம் ஐக்கிய நாடுகள் வரை தெரிந்து விடும். அதனால் தமது இனவாத, மதவாதக் கோஷங்கள் மக்களிடத்தில் செல்லாது விடும். மீண்டும் தேர்தல்கள் வரும் காலங்களில் ஆன்மாக்களின் ஆணையாக வாக்களியுங்கள் என உணர்ச்சியூட்ட முடியாமலும் தேர்தல் பிரசார மேடைகளில் மாவீரர்களுக்கு அஞ்சலிகளும் அகவணக்கங்களும் செலுத்தி வாக்குகளை அபகரிக்க முடியாமல் போய்விடும் என கூட்டமைப்பினர் அச்சப்படுகின்றனர்.

மாகாணசபைத் தேர்தல் சமயத்தில் தேர்தல் பிரசார மேடைகளில் மாவீரர்களுக்கு அஞ்சலிகளும் அகவணக்கங்களும் செலுத்தி அவர்களின் ஆன்மாக்களில் காட்டி வாக்குகளைப் பெற்று சபைக்குச் சென்றவர்கள் கடந்த ஒன்பது மாத, மாகாணசபை அமர்வுகளின் ஆரம்பங்களில் மாவீரர்களுக்கு அஞ்சலிகளையும் அகவணக்கங்களையும் ஏன் அனுஷ்டிக்கவில்லை? முதலில் இருக்கின்ற அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு சேவை புரியக் கூட்டமைப்பினர் முனைய வேண்டும். யுத்தத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தை செழுமைப்படுத்த கூட்டமைப்பினர் விரும்பவில்லை. மக்கள் மாற்றத்தை உருவாக்க வேண்டும். இதற்காக தீர்க்கதரிசனமாகச் சிந்தித்து மக்கள்தான் தீர்ப்பினை எழுதவேண்டும் எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கை ஊடாக ஊடுருவ வாய்ப்பு

## தமிழக மீனவர்களுக்கு எச்சரிக்கை

பாகிஸ்தானில் பயிற்சியளிக்கப்பட்ட அறுவர் இலங்கை ஊடாக இந்தியாவுக்குள் ஊடுருவலாம் என உளவுத்துறை வழங்கிய எச்சரிக்கையை அடுத்து, கன்னியக்குமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கரையோரப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடற்கரைப் பகுதிகளில் முக்கிய சோதனைச் சாவடிகளுக்கு மேலதிகமாக சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், பல இடங்களில் ஆயுதம் ஏந்திய பொலிஸார் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மேலும் கன்னியாக்குமரி அம்மன் கோவில், விவேகானந்தர் தெரு, திருவள்ளுவர் சிலை மற்றும் கன்னியாக்குமரியின் முக்கிய சுற்றுலாத்தலங்கள் ஆயுதப் படையினரின் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. சந்தேகப்படும்படி எவரேனும் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் மீனவர்களை குழுவாக கடலுக்கு செல்லுமாறும், பாதுகாப்பற்ற இடங்களில் மீன்பிடிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் பரீட்சை மண்டபங்கள் திறப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் 3 பரீட்சை மண்டபங்கள் நேற்று துணைவேந்தரால் திறந்து வைக்கப்பட்டன. கலை, வெளிவாரி பட்டப்படிப்புகள், முகாமைத்துவம் ஆகிய பீடங்களுக்குமான பரீட்சை மண்டபங்களே இவ்வாறு திறந்துவைக்கப்பட்டுள்ளன. காலை 7.45 மணிக்கு கலைப்பீடத்துக்கான பரீட்சை மண்டபமும் காலை 9 மணிக்கு வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பீடத்துக்கான பரீட்சை மண்டபமும், முற்பகல் 10 மணிக்கு முகாமைத்துவ பீடத்துக்கான பரீட்சை மண்டபமும் திறந்துவைக்கப்பட்டன.

**வேலணை...**

சாரம் கிடைக்காத கிராமப் பகுதிகள் தொடர்பான தகவல்களை திரட்டி வடக்கின் வசந்தம் திட்ட மின்சார பொறியியலாளர்களுக்கு அனுப்பி வைக்கவுள்ளனர். இதன்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (5)

**புலிகளை..**

குறித்து கருத்து வெளியிட்டுள்ள பாலித்த கோஹன, புலிகள் எவ்வாறு சரணடையவேண்டும் என்பது குறித்து ஐரோப்பிய இடையீட்டாளர்களுக்கு தான் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பியதாகவும், எனினும் சரணடைதல் குறித்த விவகாரம் தொடர்பில் தான் அறிந்திருக்கவில்லை என்றும் கூறியுள்ளார் என ஏ.எப்.பி.செய்திச் சேவை கூறியுள்ளது. குற்றச்சாட்டுக்களை சுமத்துவது இலகுவானதாகும். ஆனால் அவற்றில் நம்பகத்தன்மை உள்ளதா என்பது வேறு விடயமாகும் என்றும் பாலித்த கோஹன கூறியுள்ளார். ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித்த கோஹன யுத்தம் முடிந்தபோது இலங்கையின் வெளிவிவகார செயலாளராக கடமையாற்றியவராவார்.

# முகவர்களுடன் கலந்துரையாடல்

தென்னிலங்கையிலிருந்து பொருட்களை யாழ்.குடாநாட்டுக்கு தருவித்து விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள முகவர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து பல்வேறு வகையான பொருட்களை குடாநாட்டில் விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பல முகவர்கள் சில பிரச்சினைகளை அவ்வப்போது எதிர் கொண்டு வருவதாக பல தடவைகள் யாழ்.வணிகர் கழகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளை முன்னிலைப்படுத்தும் வகையிலான கலந்துரையாடலொன்று 105, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைத்து விநியோகஸ்தர்களும், முகவர்களும் முக்கியமான தீர்மானம் மேற்கொள்ளவிருப்பதால் தவறாது இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது.

# எல்லைப்பிரச்சினை அடிதடியில் முடிந்தது

## இருவருக்கு படுகாயம்

காணி எல்லைப்பிரச்சினையால் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தில் 4பேர் கொண்ட குழுவினர் கணவன், மனைவி மீது தாக்குதல் மேற்கொண்டதில் படுகாயம் அடைந்த அந்த இருவரும் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இணுவில் தெற்கு துரைவீதிப் பகுதியில், நேற்று இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த தெய்வேந்திரம் தர்மராசா (வயது-33) மற்றும் அவரது மனைவி தர்மராசா யசோதா (வயது-30) ஆகியோரும் படுகாயம் அடைந்த நிலையில், யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, இரு குடும்பத்தினரும் உறவினர்கள், இரு வீட்டின் காணி எல்லைகள் யாருக்குச் சொந்தம் என்ற முறையில் இருவீட்டுக் காரருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கத்தின் போது மறு வீட்டுக்காரர் 4பேர் இணைந்து குறித்த கணவன்,மனைவிக்கு சவள் மற்றும் பொல்லால் தலையில் தாக்கியுள்ளனர். இதனாலேயே இந்த விபரீதம் ஏற்பட்டது. (25)

# வவுனியாவில் கிளைமோர் குண்டுகள்



வவுனியா சிதம்பரபுரம் வீதியில் உள்ள கல்வீரங்குளத்தில் மூன்று கிளைமோர் குண்டுகள் நேற்று மாலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியா விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வவுனியா சிதம்பரபுரம் வீதியில் உள்ள கல்வீரங்குளத்தில் இருந்து வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்த விவசாயி ஒருவர் குளத்தின் உட்பகுதியில் உள்ள பாசிப்புதர்களுக்குள் கிளைமோர் குண்டுகள் இருப்பதைக் கண்டு வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா பொலிஸார், தேடுதல் நடத்தியதில் மூன்று கிளைமோர் குண்டுகளும் அதற்கான சார்ஜர்களும் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இரவு நேரம் ஆனதால் இப்பகுதியில் மேலும் குண்டுகள் இருக்கக் கூடும் எனக் கருதியும் அக் குளம் அமைந்துள்ள பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன் இன்று அக்குண்டுகள் மீட்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

**தேர்ச்சில்...**

டிருந்த போது தேரிழுத்துக்கொண்ட முதியவர் சனநெரிசலில் அகப்பட்டு கிழே விழுந்த நிலையில் அவரது வலது காலில் தேர்ச்சில்லு ஏறி கால் சிதைவடைந்துள்ளது. உடனடியாக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (இ,25,பா)

**மேலும்...**

காணப்பட்டதால் இவை விடுதலைப்புலிகளின் பெண் போராளிகளுடையது என்றும் நம்பப்படுகின்றது.


பெண்களின் உள்ளாடைகளுடன் போராளிகளின் இலக்கத்தகடுகள் இரண்டும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் அப்பகுதியில் பாதுகாப்பு கடமையிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

காலை 07.10 முதல் மாலை 06.00 மணிவரை நடைபெற்ற மீட்பும் பணியில் 37 எலும்புத்துண்டுகளும் 09 மகசின்கள், கைக்குண்டுகள் 6.142 தோட்டாக்கள், 2784மற்றும் ஞா.1190 எனும் இலக்கத்தகடும் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் வரிச்சீருடை, புாதணிகள் என்பனவுடன் பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (25, 37)

# காலி மாவட்டத்தில் மரச் செதுக்கல் கிராமம்

## ஜனாதிபதி இன்று திறந்து வைக்கிறார்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டலுக்கு அமைவாக காலி மம்பிட்டியவில் பாரம்பரிய மரச் செதுக்கல் கிராமம் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ள நிலையில் இதன் முன்னேற்றப்பாடுகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

ஜயமாவத்தை மம்பிட்டிய பகுதிக்கு அமைச்சர் நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டின் கீழ் பாரம்பரிய மரச்செதுக்கல் கிராமம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான முன்னேற பாடுகள் தொடர்பில் அமைச்சர் குறித்த பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு முன்னேற்பாடுகள் தொடர்பில் நேரில் ஆராய்ந் தறிந்தும் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்தும் கொண்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் றமேஸ் பத்திரன, தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்திகீர்த்திசேன, ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் உடனிருந்தனர்.

# உரிமை கோரப்படாத சடலங்கள் அரச செலவில் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் சவச்சாலையில் நீண்ட நாட்டகளாக உரிமை கோரப்படாமல் வைக்கப்பட்டிருந்த இரண்டு சடலங்கள் கடந்த திங்கட்கிழமை அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்திய சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கோம்பயன் மணல் மயானத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கென ஒதுக்கப்பட்ட இடத்திலேயே இந்தச் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# தீர்த்தத் திருவிழா

பருத்தித்துறை வீதி ஆவரங்கால் பர்வதவர்த்தனி அம்மன் நடராஜ இராமலிங்க சுவாமி ஆலய தீர்த்தத் திருவிழா இன்று காலை ஆலயத் தீர்த்தக் கேணியில் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

---

கரவெட்டி முங்கோட்டை ஆலயத்தின் தீர்த்தத் திருவிழ இன்று காலை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்படுள்ளதுடன் இவ்வாலய தேர்த்திருவிழா நேற்று வியாழக் கிழமை இடம்பெற்றமையும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (85)

# வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கரணவாய் அண்ணாசிலையடி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களின் வரிசையில் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனத் திருவிழா மறுநாள் வியாழக் கிழமை வேட்டைத்திருவிழாவும் இடம்பெற்று 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை தீர்த்த உற்சவத்துடன் திருவிழாக்கள் யாவும் நிறைவடையவுள்ளன என ஆலய பிரதம குரு அறிவித்துள்ளார்.

# கடற்றொழிலாளர்களுக்கு 4000 உயிர்காப்பு அங்கிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கவென சுமார் 4000 உயிர்காப்பு அங்கிகள் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வழத்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்திருப்பதாக உதவிப்பணிப்பாளர் ந.கனகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வந்து சேர்ந்த உயிர்காப்பு அங்கிகளை கடற்றொழலாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதல்கட்டமாக சுமார் 400 வரையான உயிர்காப்பு அங்கிகள் வந்திருப்பதாகவும் இவை கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கப் போதுமானதாக இருக்கவில்லை எனவே யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் தேவை அதிகமாக இருப்பது குறித்து அமைப்பிற்குத் தெரியப்படுத்தியதனை அடுத்து மற்றுமொரு தொகுதி அண்மையில் வந்து சேர்ந்திருப்பதாகவும் தற்சமயம் 4000 உயிர்காப்பு அங்கிகள் மொத்தமாக வந்து சேர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## இன்று போராட்டம்

கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தக்கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது.

# பிரித்தானிய பிரஜை கொலை, விரைவில் வரும் தீர்ப்பு



பிரித்தானியா பிரஜையான தொண்டு நிறுவன பணியாளர் குராம் ஷேக் கொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பான தீர்ப்பை இன்னும் இரண்டு வாரங்களில் வழங்க முடியும் என கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உறுதியளித்துள்ளது.

வழக்கு விசாரணை தொடர்பான அனைத்து தரப்பினரும் தமது இறுதி வாதங்களை எதிர் வரும் 11 ஆம் திகதி முன்வைக்க அறிவிப்பை வெளியிட்ட போதே, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரோஹினி வல்கம இதனை அறிவித்துள்ளார்.

வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சம்பத் சந்திரபுஷ்ப வித்தானபத்திரண உட்பட ஏனைய 5 சந்தேகநபர்கள் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

சட்டமா அதிபர் சார்பில் பிரகீத் சத்துரங்க வழக்கில் ஆஜராகியிருந்தார்.

2011 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி குராம்ஷேக் கொலை செய்யப்பட்டதுடன் அவரது காதலியான விக்டோரிய கூட்டாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார். இந்தச் சம்பவம் தங்காலை நேச்சர் சுற்றுலா விடுதியில் இடம் பெற்றது. சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

## மன்னார் கடலில் மீனவர் பலி

மன்னார் பனங்கட்டுக் கொட்டைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கடல்வாழ் உயிரி ஒன்றின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த ராஜ்குரூஸ் வெலிங்டன் (வயது 28) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மன்னார் பனங்கட்டுக் கொட்டை சேர்ந்த ஐந்து மீனவர்கள் கடற்றொழிலுக்கு சென்றுள்ளனர். இவர்களில் இருவர் கடலில் இறங்கி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது சொறி என மீனவர்களால் அழைக்கப்படும் ஒருவகை கடல்வாழ் உயிரினம் குறித்த இரண்டு மீனவர்களையும் தீண்டியுள்ளது.


உடல் அரிப்புக்கு உள்ளான மீனவர்கள் உடனே படகில் ஏறி கரைசேர்ந்தனர். இவர்களில் ஒருவர் கடலுக்குள்ளேயே மயக்கமடைந்துள்ளார். இருவரும் எருக்கலம்பிட்டி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் ஒருவர் கடலுக்குள்ளேயே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

# கல்விமானி பட்டக் கற்கை நெறி

நெல்லியடி கற்கை நிலையத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமானி 2011/2013 பயிற்சி நெறியினைப் பின்பற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான 3 ஆம் வருட வகுப்புக்கள் நாளை மு.ப 9. மணிக்கு யா/நெல்லியடி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

குறித்த மாணவர்களையும் இப்பயிற்சி நெறியின் கல்விசார் பாட விரிவுரையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு இணைப்பாளர் செ.சேதுராஜா கேட்டுக்கொள்கின்றார்.

# கடற்படைத் தளபதி கோத்தாவுடன் சந்திப்பு



புதிய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாகச் சந்தித்தார்.

19 ஆவது கடற்படைத் தளபதியாக நியமனம் பெற்றுள்ள வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா பதவியேற்ற பின்னரான முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பு இதுவாகும். இதன் போது புதிய நியமனம் குறித்து செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேராவுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

இச்சந்திப்பை நினைவு கூரும் முகமாக வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா, பாதுகாப்புச் செயலாளருக்கு நினைவுச் சின்ன மொன்றையும் கையளித்தார்

# ரமழான் வர்த்தக சந்தை

இலங்கை பாகிஸ்தான் நட்புறவு அமைப்பினால் இஸ்லாமியரின் நோன்பு பெருநாளை முன்னிட்டு ரமழான் மற்றும் ஈத் வர்த்தக சந்தை நாளை கொழும்பு வெள்ளவத்தை இலக்கம் 07 லிலி அவனியூவில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட இஸ்லாமிய கலாசார இல்லம் நடைபெறவுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையேயான நட்புறவினை பலப்படுத்தும் நோக்கிலேயே இவ்வர்த்தக சந்தை ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ் வர்த்தக சந்தை 5ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடத்தப்பட்ட வியாபாரச் சந்தை மிக வெற்றிகரமாக நடைபெற்றது் என்றும் இம்முறையும் அவ்வாறே அமையும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் வியாபாரச் சந்தை ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வர்த்தகச் சந்தையில் சுவையான உணவுகள், சட்னி, ஊறுகாய், ஒப்பனைப் பொருட்கள், வாசனைத்திரவியங்கள், விளையாட்டுப் பொருட்கள், பரிசுப் பொருட்கள், ஆண்கள் பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைகள் என அனைத்தும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வர்த்தகச் சந்தைக்கு 4000 இற்கும் அதிகமானவர்கள் வருகை தருவார்கள் என தாம் எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டாளர்கள தெரிவித்துள்ளனர். விற்கப்படும் டிக்கெட்டுக்கள் மூலம் தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.